உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

...3] சோபகிருது ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—63 [இதழ் 1

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தன்பெருமை யெண்ணாமை
தற்போத மேயிறத்தல்
மின்பெருமை யாஞ்சகத்தை
வேண்டாமை — தன்பால்
உடலைத் தினப்பழித்தல்
ஓங்குசிவத் தொன்றல்
நடலைப் பிறப்பொழியு
நாள். (12)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சொ. சிங்காரவேலன், M. A.

உ
குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 | 10-12-63 | இதழ் 1

உட்பொருள்

எண்		பக்கம்
1	மார்கழித் திங்கள் ...	1
2	வணக்கம் ...	5
3	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ...	7
4	புத்தாண்டு வாழ்த்து ...	14
5	அருள்வாக்கு - IV ...	17
6	சமயமும் இளைஞர்களும்	20
7	சிவஞானபோதச் சிற்றுரை ...	26
8	சித்தாந்த வினாவிடை ...	30
9	பெருமழையும் திருமுறையும் ...	35
10	சஹஸ்ராகமம் ...	38
11	இயற்கைக் காட்சியும் செயற்கைக் காட்சியும்	42
12	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் கேதார நாதம் பதரிநாதத் தலயாத்திரை ...	45
13	ஒருவாசகம் ...	51
14	தருமையாதீன வெளியீடுகள் ...	54
15	திருக்கோயில் அமைப்பு முறை ...	58
16	செய்திகள் ...	62
17	எதிர்காலம் ...	73
18	பொருளடக்கம் ...	i

அட்டைப்பட விளக்கம்

தில்லையில் திருநடம்புரியும் பெருமான்



தருமையாதினக் குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] சோபகிருது - கார்த்திகை-10—12—63 [இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

மார்கழித் திங்கள்

இறைவன் திருப்பெயரை ஓதுதலும், கேட்டலும், சிந்தித்தலுமே நிலைத்த இன்பத்தைத் தருகின்றன. வேறொன்றாலும் வாராத இன்பத்தைத் தருவதுடன் மற்றொன்றாலும் அடையமுடியாத செல்வத்தையும் இச் செயல்கள் தருகின்றன. 'சென்றடையாத திரு' என்று திருஞானசம்பந்தர் கூறியருள்வதும், 'வாராத செல்வங்கள்' என்று திருநாவுக்கரசர் பாடியருள்வதும் இப்பேறுகளேயே. 'எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக வேண்டுமாயின் இறைவன் அடிமலர் ஏத்துவதே நெறி' என்று மணிவாசகர் திருவெம்பாவையில் ஓதியருள்வதும் இதுவேயாகும். இவ்வாறு சிந்தனை

யையும், மொழியையும், செயல்களையும் அவனுக்கென்றே ஆட்படுத்தியவர்கள் நம் சமயாசாரியர்கள் :

" சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி
வாக்குஉன் மணிவார்த்தைக் காக்கி "

என்பது திருவாசகம்.

திருவங்கமாலையில் அப்பரடிகள் மனமொழி மெய்களால் இறைவனை வழிபடுமாற்றை அருளியுள்ளமை ஆழ்ந்துணரத் தக்கது.

திரிகரணங்களையும் சிவகரணங்களாக மாற்றிக்கொள் ளுவதே அறிவுடைய ஆன்மாக்களுக்கு அழகு :

தமிழையும் சைவத்தையும் பாரதநாட்டிற் பரப்பிய பெருஞ்சமயச் சான்றோராகிய ஸ்ரீ குமரகுருபரர், தருமை யாதீன நான்காவது குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிக மூர்த்திகள்மீது மனங்கசிந்து பாடியருளிய பண்டார மும் மணிக்கோவையென்னும் பேரருட் பனுவலில், இத் திரிகர ணங்கள் திரியுமாற்றை மிக இனிமையாகப் பாடியுள்ளனர். இவ்வாறு நல்ல நினைவும், நல்லமொழியும், நல்லசெயலும் வாய்ந்தமையால், அவகரணமாயிருந்த அவை சிவகரணங் களாய்த் திரிந்தன என்று நயம்பெறப் பாடும் அப்பகுதி பின்வருமாறு :-

" வாக்கும் மனனும் யாக்கையும் ஒன்றுச்
சொற்றரு கரண மற்றிவை மூன்றும்
நின்புகழ் நவிற்றியும் நினைத்தும்நின் துணைத்தாள்
அன்புடன் இறைஞ்சியும் இன்ப முற்றனவால்
அவகரணங்களேயல்ல மற்று அம்ம
சிவகரணங்களாய்த் திரிந்தனவன்றே "

மன மொழி மெய்களால் இறைவனை வழிபடும் பேறு, தமிழ் உலகிற்கு, மிகச் சிறப்பாக மார்கழித் திங்களில் உள்ளது.

மார்கழிமாதம் வர இருக்கிறது; திருவெம்பாவை திருப்பாவை முழக்கம், சமய முன்னணி வீரர்களாந் தொண்டர்களால் விண்ணையெட்ட விருக்கின்றது.

கடந்த பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான திருவெம்பாவை மாநாடுகளைக் கூட்டியும், இலட்சக்கணக்கான திருவெம்பாவை நூல்களை வெளியிட்டும் தமிழர் உள்ளத்தில் தனியிடங் கொண்டுள்ள தருமையாதீனம் இவ்வாண்டிலும் மிகச் சிறப்பாகத் திருவெம்பாவை மாநாடுகளை எல்லாத் தேவஸ்தானங்களிலும் கொண்டாட விருக்கின்றது. ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி’யின் திருப்புகழ் விரிக்கும் இம்மாநாடுகளால் நாட்டில் பக்திநெறியில் ஒரு புதிய ஊக்கமும் உற்சாகமும் இணைந்து மறுமலர்ச்சி விளைந்திருப்பதை நாடு நன்கறியும். பக்திநெறி ஒன்றையே திருவுளங்கொண்டு அயராது அருளிவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தம்முடைய அருளுரைகளில் அவ்வப்போது கூறிவருவதுண்டு, “திருவெம்பாவை போன்ற திருமுறை நூல்களும், திருப்பாவை போன்ற திவ்யப் பிரபந்தங்களும் உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களாக உள்ளன; திருக்குறள், வாழ்வின் மேல்வரிச் சட்டநூலாக உள்ளது” என்று.

அந்நெறிநின்று இம் மார்கழி மாதத்தில், நல்லொழுக்க நெறிநின்று, இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்து ஒழுகி, எண்குணத்தான் தாளை ஏத்திப் பிறவிப் பெருங்கடல் நீந்த அன்புலகு முந்துதல் வேண்டும்.

திருக்குறளை நன்கு ஓதும்போது அங்கும் மன, மொழி, மெய் வழிபாடுபற்றி மிகச் சிறப்புற நாயனாரால் அருளிச் செய்யப்பட்டுள்ளமை அறியத்தக்கது.

“மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற”

என்றும்,

" மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் "

என்றும்,

" மனத்தானும் மாந்தர்க்குணர்ச்சி இனத்தானும்
இன்னானெனப்படுஞ் சொல் "

என்றும்,

" யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு "

என்றும்,

" கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை "

என்றும், வருவனவற்றாலும், இன்னும் பல குறட்பாக்களா லும் மன மொழி மெய்த் தூய்மைநெறி புரக்கப்பட்டுள்ளது. திருப்பாவையிலும் " வாயினாற் பாடி மனத்தினாற் சிந்தித்து " என்று ஆண்டாள் பாடியருள்வது உணரத்தக்கது.

இவ்வாறு வழிபடும் நல்ல நாட்களாக மார்கழிமாதம் முழுமையுமே பயன்படுத்திக்கொண்டு பாவைகளைப் பாங்குற ஓதி இம்மை மறுமை நலங்கள் அனைத்தையும் சமய அன்பர் கள் பெற்றால், வீடும் நாடும், உலகும் செழிக்கும் என்பது உறுதி.

" ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனைவழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே "

வணக்கம்

எச் சம்பந்தத்தினும் மேலானது ஞானசம்பந்தம். அதனையே நமது "ஞானசம்பந்தம்" இதழ் நாடெங்கும் வளர்த்துவரு கின்றது. இது, திருத்தருமையாதீனத்தின் ஆதி பரமாசாரிய சுவாமிகள் அருளால், அவர்களது திருப்பெயரைத் தாங்கி, 24-ஆவது மகாசந்நிதானத்தின் அருளாட்சிக் காலத்திலிருந்து தோன்றி மலர்ந்து வருவது. இதற்கு இருபத்திரண்டு ஆண்டு கள் நிறைவெய்தி, இருபத்துமூன்றாவது ஆண்டு தொடங்கப் பெறுகின்றது. இவ்விருபத்துமூன்றாவது ஆண்டின் முதல் இதழாகவே இது மலர்கின்றது.

புத்தாண்டு இதழாகிய இது புதியதொரு திருவருட்பேற்றுடன் வெளிவருகின்றது. தோத்திர நூல்களாகிய திருமுறைகள் பன்னிரண்டையும் பற்றி அரிய அருள் விளக்கங்களை வழங்கி யருளிய 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சாத்திர நூல்களாகிய மெய்கண்ட நூல்கள் பதினான் கைப் பற்றியும் அத்தகைய அருள் விளக்கங்களை வழங்கியருளத் திருவுளம் இசைந்து, முதற்கண் உள்ள திருவுந்தியார் பற்றிய அருளுரையை வழங்கியருளியதே அத் திருவருட்பேறாகும். இதனால், திருமுறைகளின் பெருமை, சித்தாந்த சாத்திரங்களின் தன்மை, திருவுந்தியாரின் தெளிபொருள் முதலியவற்றைச் சைவ உலகம் எளிதில் உணர்ந்து பயன்பெறும். திருவுந்தியாரில், "உள்ளம் உருகில் உடனாவர்" என்னும் அரிய உந்தியாரைச் சிறப்பாக எடுத்து அன்பின் இணையற்ற பெருமையை விளக்கி யருளியது அவர்கள் அன்புத் திருவுள்ளத்தைத் தெளிய உணர்த்துகின்றது, இத்தகைய பெருங்கருணைக்கு அனைவர் சார்பிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கட்கு வணக்கத்தைச் செலுத்திக் கொள்கின்றோம்.

சென்றஆண்டு இதழ்களில் தொடர்ந்து வந்துள்ள அருள் வாக்கு, சஹஸ்ராகமம், சித்தாந்த வினாவிடை, சிவஞானபோதச் சிற்றுரைக் குறிப்பு முதலியனவும் இவ்விதழில் தொடர்ந்து வெளிவருகின்றன. 'ஒருவாசகம்' என்னும் புதியதொரு விளக்கக் கட்டுரை, உயர்ந்த நூல்கள் இவை என்பதை உலகிற்கு உணர்த்தும். 'ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் கேதாரம் - பத்ரிநாதத் தல யாத்திரை' சென்ற இதழில் தொடங்கியது இவ்விதழில் தொடர்ந்து காட்சியளிக்கின்றது. வழக்கம்போல் வரும் செய்திகள், எதிர்காலம் முதலியவைகளுடனும் வெளிவருகின்றது. புதிய ஆண்டுத் தொடக்கத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை நினைவுகூரும் வகையில் அவர்களது திருவுருவப்படம் முதலியன இவ்விதழில் இடம்பெறுகின்றன. வழக்கம்போல் சந்தாநேயர்கள் ஞானசம்பந்தம் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

"ஞானசம்பந்தம்"

சமய இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவரும்

திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சைவசமயிகள் அனைவரும் பயில வேண்டிய இதழ். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

திருவுந்தியார்

உள்ளம் உருகில் உடனாவ ரல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற.

— *திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார்.*

நம் நாடு ஞானந் தழைத்த நாடு ; ஞான சந்தானங்கள் நன்கு பெருகிய நாடு. அதனால், உலக சந்தானங்களேயன்றி ஞானசந்தானங்களும் ஆங்காங்குப் பல தோன்றி வளர்ந்தன. நந்தி பரம்பரை, கந்த பரம்பரை முதலாகப் பல ஞான பரம்பரைகளை நம் நாட்டிலேதான் காண முடியும். அவ்வகையில், திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார் பரம்பரை ஒன்று.

ஞான சந்தானங்கள் நம் நாட்டில், முதற்றொட்டு வழிவழியாகப் பெற்றுப் போற்றிவரும் ஞானத்தைப் பல பக்குவர்களுக்குச் செய்யும் உபதேச வாயிலாகவும், அதனை இனிது விளக்கப் பல்வேறு வடிவில் செய்யப்பட்ட நூல்களாலும் நிலவச்செய்து வருகின்றன. அத்தகைய நூல்களுள் மிகச் சிறந்தனவாகப் பெரியோர்களால் தொகுத்துத் தரப்பட்ட நூல்கள் பதினான்கு.

அவை :- 1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞானசித்தியார், 5. இருபா இருபஃது, 6. உண்மைவிளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப்பஃறொடை,

11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடுதூது, 13. உண்மைநெறி விளக்கம், 14. சங்கற்பநிராகரணம் என்பன. இவற்றை,

" உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் — வந்தவருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று "

என்னும் வெண்பாவால் அறியலாம். இப்பதினான்கு நூல்களும் சித்தாந்த சாத்திரங்களாகும். சைவசமயத்திற்கு உரிய நூல்கள், 'தோத்திரம், சாத்திரம்' என இருவகைப்படும். பன்னிரு திருமுறைகளும் தோத்திரம். இங்குக் கூறிய பதினான்கு நூல்களும் சாத்திரம். 'தோத்திரம், சாத்திரம்' என்னும் இரண்டும் சைவத்தின் இரு கண்களாகும். "தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே" என்பது அப்பர் திருமொழி. சித்தாந்தசாத்திரங்களின் தலைமணி நூலாகிய சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்டாரது திருவவதாரத்திற்குக் காரணமாயிருந்தது திருஞானசம்பந்தரது தேவாரத் திருப்பாடல். அதனால் அவதரித்த மெய்கண்டார் அத்தேவாரம் முதலிய அனுபவப் பொருளையே தமது சிவஞானபோதத்தில் ஆராய்ச்சி முறையில் விளக்கியருளினார். அந்நூலே சித்தாந்தக் கருத்துக்கள் அனைத்தையும் கூறும் முழுநூலாகும். ஆகவே சித்தாந்த சாத்திரங்களுக்குத் திருமுறைகளே மூலமென்பது விளங்கும். எனவே திருமுறைகள் இலக்கியமும் சித்தாந்தசாத்திரங்கள் அவற்றிற்கு இலக்கணமுமாய் அமைதல் புலனும். இவற்றால், சைவத்திற்கு வேதம் திருமுறைகளே என்பது தெளிவாகும்.

சித்தாந்த சாத்திரம் பதினான்கையும், 'மெய்கண்ட நூல்கள்' என்றும், மெய்கண்டசாத்திரம் என்றும் வழங்குவர். அவைகளில் முதற்கண் உள்ள 'திருவுந்தியார்' என்னும் நூலே இப்பொழுது நம் சிந்தனைக்கு உரியதாகின்றது.

சாத்திரங்களை ஆசிரியர்கள் இருவகையாக அருளியுள்ளார்கள்; ஒன்று உபதேசமுறை; மற்றொன்று ஆராய்ச்சி முறை. பதினான்கு சாத்திரங்களில் முதலில் உள்ள இரண்டும் உபதேச முறை; மற்றவை ஆராய்ச்சி முறை. ஆகவே, 'திருவுந்தியார்' என்னும் நூல், உபதேச முறையில் ஞானத்தை விளக்குவதாகும்.

திருவுந்தியார் தனது ஞான நுண்பொருளை உபதேச முறையில் விளக்குமிடத்து, முதற்கண் ஞானாசிரியரது பெருமையை

அருளுகின்றது. ஞானாசிரியர் ஏனையோரைப் போலத்தான் காணப்படுகிறார். அஃதாவது, மற்றவர்களைப்போலவே, முகம் கை, கால் முதலிய உறுப்புக்களை உடையவராயும், உண்ணல் உடுத்தல் முதலியவைகளைச் செய்பவராயுந்தான் காணப்படுகின் றார். 'ஆனால், அவைபற்றி அவரை நம்மில் ஒருவராகக் கருதி விடுதல் கூடாது' என்கின்றது இந்நூலின் முதற் செய்யுள்.

"அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்தது"

என்பதே அத்தொடர்.

அகளம் - உருவம் இல்லாதது. சகளம் - உருவம் உடையது. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதது; பரம்பொருள் ஒன்றே; அதனால், அதனை யாரும் அறிதல் எளிதில் முடியாத தாகின்றது. அங்ஙனம் யாராலும் அறிவதற்கரிய அந்தப் பரம் பொருள்தான், அனைவராலும் ஊனக்கண்ணால் எளிதில் கண்டும் உரையாடியும் அளவளாவி மகிழும் வண்ணம் ஆசாரியனாய் எழுந்தருளிவந்தது என்பது இங்குக் கூறப்பட்டது. "ஆராலும் காண்டற்கரியான் எமக்கெளிய பேராளன்" என்ற மணிவாசகம் (அம்மானை) இங்கு நினைவுகூரத் தக்கது.

என்னே வியப்பு! உருவம் அற்ற பொருள் உருவமாய் வருவானேன்? இவ் வினாவிற்கு, 'அருள்தான் காரணம்' என்பதே விடை. துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் தன்னை யும் அறியாது தலைவனையும் அறியாது துயர்உறும் தொல் லுயிரை, அவ்வேடரிடத்தினின்றும் மீட்டுத் தனது பேரின்பத்தை அளித்தற்பொருட்டே இறைவன் ஆசாரியத் திருமேனி தாங்கி வருகின்றான்.

"மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

— சிவஞானசித்தியார்.

அங்ஙனமாயின் எல்லோரையும் வந்து ஏன் ஆட்கொள்ள வில்லை? அதற்குரிய பக்குவம் இல்லாமையே காரணம். இப் பக்குவம் என்பது முன் பிறப்புக்களிற் செய்த தவம் காரண மாகவே வாய்க்கும். ஆகவே, இறைவன் குருவாகி வரப்பெறு தல் முன்னைத் தவத்தினலேயாம். "தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்பது சிவஞானபோதம்.

பக்குவம் வாய்ந்தோரைத் தனது உண்மை வடிவத்தில் தோன்றி ஆட்கொள்ளாமல், ஆசான் மூர்த்தியாய் வந்து ஆட் கொள்வதென்னை யெனின், அது, மானைக்காட்டி மானைப் பிடிப் பது போன்றதாகும். இறைவன் தனது இயற்கை வடிவத்தைக் காட்டின், அதனைக் கண்டு பயன்பெறும் ஆற்றல் ஒருசில உயிர் கட்கே உண்டு. ஆகையால், ஏனையோர் பலரையும் இறைவன், ஒரு பார்வை மிருகத்தைக் கொண்டு பல மிருகங்களைப் பிடிப் பதுபோல, ஆசான் மூர்த்தியாய் வந்தே ஆட்கொள்வன். அதனால், ஆசாரியத் திருமேனியை, "பார்வையென மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் - போர்வை" என்கின்றது திருவருட் பயன். இதுபற்றியே இறைவன் ஆசான் மூர்த்தியாய் வருதலை, 'மானிடச் சட்டை சாத்தி வருதல்' என்று கூறுவார்கள். ஆகவே, "குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்ற திருமூலர் வாக்கின்படி ஆசாரியர் சிவமேயாதல் தெளியப்படும்.

"குரவனே அயன்அரி குரவ னேசிவன்
குரவனே தந்தைதாய் குரவ னேயெலாம்
குரவனே யென்றுநூல் கூறும் உண்மையைக்
குரவனே யென்னிடை இன்று காட்டினுய்"

எனக் காஞ்சிப்புராணமும் கூறுகிறது. குருவினல் அன்றி இத்தகைய ஞானத்தை அடைதல் இயலாது.

"ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே — பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு"

என்பது திருக்களிற்றுப்படியார். இதனை நம் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரும்,

"ஆரறிவார் நீதிவழி யாரறிவார் சித்திமுத்தி
ஆரறிவார் நற்றவங்கள் அன்பனைத்தும்–பாரெவர்க்கு

கத்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனும்
அத்தனென்போல் வந்திலனு னல்"

என்று மிக அழகாகத் தெளிவுபடுத்தினுர்கள்.

இறைவன் இவ்வாறு குருவாய்வந்து அருள்செய்வது மும் மலங்களுமுடைய சகலருக்கேயாகும். ஒருமலமுடைய விஞ்ஞான கலர்க்கு உள்நின்றே உணர்த்தி ஞானத்தைத் தருவான். இரு மலம் உடைய பிரளயாகலருக்குத் தனது நாற்றோளும் முக் கண்ணும் கறைமிடறும் உடைய இயற்கை வடிவத்தில் ஒருகால் தோன்றி ஞானத்தை அருளுவான்.

ஞானத்தின் பயன் நாம் அவனுகி அவனது இன்பத்தை அனுபவித்தலேயாகும். அதனுல், அவன் குருவாகிவந்து அருள் செய்த பயனைத் திருவுந்தியார்,

"அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானுகத் தந்ததென் றுந்தீபற"

என விளக்கியுள்ளது.

இங்ஙனம் தானுகத் தந்த பேற்றினைப்பெற்றவர், அதிலேயே நிற்கப் பழகவேண்டும். பழகினுல் கண்டதைக் கொண்டு கருமம் முடித்தவராவார். அவர் பிண்டத்தில் வாரார். அவர் கட்குப் பிறப்பு இறப்பு இல்லை. நம் செயல் அற்று, 'நான்' என்னும் தற்போதமும் அற்று, நாதன் தன் செயலேயாய் நிற்பர். இவைகளை முதலிற்கூறி முடித்தபின், ஞானத்தை விளக்கத் தொடங்குகின்றது திருவுந்தியார். அத் தொடக்கச் செய்யுளே இங்கு நம் சிந்தனைக்கு எடுத்துக்கொண்டது. அச்செய்யுள் முதலிலே காட்டப்பட்டது.

எல்லாப் பேறுகளிலும் மேலான பேறு, சிவனைப் பெறுதலே. 'சிவம்' என்பதற்கு, 'மங்கலம்' என்பது பொருள். அமங்கலம் சிறிதும் இன்றி, மங்கலத்தை நிரம்ப உடைய பொருள் பரம் பொருளையன்றி வேறில்லை. அதனுல், அந்தப்பொருளை, 'சிவம்' என்னும் பெயரால் குறிக்கின்றனர் சைவப்பெருமக்கள். சிவத்தை அடையும் வரையிலும் அமங்கலம் அகலாது; மங்கலம் நிரம் பாது. ஆகவே, சிவத்தைப் பெறுவது ஒன்றே சீவர்களுக்குச் சிறந்த பேருகும்.

சிவம், அகளமாய் யாரும் அறிவரிது. அதனை எவ்வாறு அடைவது? பலர் பல வழிகளைக் கூறுகின்றனர். சிலர் ஆராய்ச்சியால் அதனை அடைந்துவிடலாம் என்கின்றனர். அந்த ஆராய்ச்சிகள், 'தத்துவ சாத்திரம்' என்னும் பெயரால் பலப் பலவாக வழங்குகின்றன. ஆனால், திருவுந்தியார் ஒரே வழியைத்தான் கூறுகின்றது. அதாவது, 'உள்ளம் உருக வேண்டும்' என்கின்றது. தெள்ளுதல் அஃதாவது ஆராய்ச்சியிலே அப்பொருள் அகப்படாது என்றும் கூறுகின்றது.

'காரணம் என்ன?' என்பார்க்கு, அது சிற்பரம்; அஃதாவது அறிவாயும் எல்லாப் பொருள்கட்கும் மேலானதாயும் உள்ளது என்கின்றது. அறிவற்ற சிறிய சடப்பொருள்களே நம் ஆராய்ச்சி முறைகளுக்கு உட்படும். அறிவாய் உள்ள பெரிய பொருள் அதில் அகப்படுதல் இல்லை. ஆதலின், அதனை அன்பினாலேதான் அடையமுடியும். அதுபற்றியே, "உள்ளம் உருகில் உடனாவர் அல்லது தெள்ள அரியர்; சிற்பரச் செல்வர்" என்றார் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார்.

இங்கு 'உள்ளம்' என்பது, 'நான்' என்னும் தற்போதத்தைக் குறிக்கும். உருகுதல், அத் தற்போதம் கெட நிற்றலாகும். 'யான் எனது' என்னும் செருக்கு அற்ற பொழுதே, உயிர்க்கு உயிராய் நிற்கும் இறைவன், உயிரைத் தனது வியாபகத்துள் அடக்கித் தானாகி நிற்பன். இதனையே,

"யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின்றது தற்பரமே"

என்றது கந்தரனுபூதி. தானாகிநின்ற நிலையே இங்கு, 'உடனாவர்' எனக் கூறப்பட்டது. 'உடனாதல்' என்னும் தமிழ்ச்சொல், 'அத்துவிதம்' என்னும் வடசொல்லின் பொருளை உடையது. ஆகவே, இது, சுத்தாத்துவித சித்தாந்த பரமுத்தி நிலையை விளக்கியதாயிற்று. இதற்குப் பின் கூறுவனவெல்லாம், இந் நிலையை அடைதற்கு உரிய வழிகளேயாகும்.

இங்கு ஒன்று இன்றியமையாது அறியத்தக்கது. அஃதாவது, அளவற்ற பெரும்பொருளை மிகச் சுருங்கிய அளவில் அடக்கியுள்ள, "உள்ளம் உருகில் உடனாவர்" என்னும் தொடர், திருஞானசம்பந்தரது, "தளரிள வளரென உமைபாட" என்னும் திருவாய்மூர்த் திருப்பதிகத்தில்,

" நஞ்சு உண்ணப் பொலிந்த மிடற்றினர்
உள்ளம் உருகில் உடனாவர் "

என அருளப்பட்ட தொடரேயாய் இருத்தலாம். இதனால், 'சித்தாந்த சாத்திரங்கட்கெல்லாம் மூலம் திருமுறைகளே' என மேற்கூறியது இங்குக் கண்கூடான உண்மையாகின்றது.

சிற்பரச் செல்வர் உடனாதற்கு, 'ஆதார யோகம், நிராதார யோகம்' என இருவழிகள் முறையே கூறப்படுகின்றன. அவற்றின் வழியே மீதானத்தை அடையலாம். அங்குத் திருச்சிலம்போசை கேட்கும். அவ்வோசை வழியே நிருத்தனைக் கும்பிடலாம். அங்கு அவன் அருளை மறவாதிருத்தல் வேண்டும். அப்பொழுது அவன், தனது இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே நம்மைச் சேர்த்துக்கொள்வான். சேர்த்துக்கொண்டு அதினின்றும் தவறாதபடி நம்மைக் காக்கவும் காப்பான். அந்நிலையில் சிறிதும் வழுவுதல் தோன்றாதபடி எட்டுக் கொண்டார் தமை (இறைவனை) த் தொட்டுக்கொண்டே நிற்றல் வேண்டும்.

இறைவனைத் தொட்டுக்கொண்டே நிற்றலாவது, அவன் நமக்குச் செய்த - செய்துகொண்டிருக்கின்ற - உபகாரத்தை நினைந்து நினைந்து மனம் கசிந்துருகுதலாம். அந்த அன்பே ஞானத்தின் விளைவு. அதை அடையாதவர் வித்தினைத் தேடி மூளையைக் கைவிட்ட பித்தர் போன்றவராவர். அந்த அன்பை அடைந்தவர்க்கு இல்லறம் துறவறம் இரண்டும் ஒன்றே. அவர்கட்குச் சாக்கிரத்தே அதீத நிலை வாய்க்கும். அதனால், சிற்றின்பமும் பேரின்பமாகவே விளையும். மாயை தலைகாட்டாது ; மறித்துப் பிறப்பு இல்லை. வேதாந்தத் தெளிவாகிய சுத்தாத்துவித சித்தாந்த பரமுத்தி இதுவே. இவ்வின்பத்தை இவ்வுடம்பு இருக்கும் நிலையிலேயே துய்க்கலாம் என்று இவ்வாறெல்லாம் விளக்கி, முடிவிலும் ஆசாரியரையே வாழ்த்தி முடிக்கின்றது திருவுந்தியார்.

" சிந்தையி னுள்ளும்என் சென்னியி னும்சேர
வந்தவர் வாழ்கஎன் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற. "

இவ் அரிய ஞானக் கருவூலமாகிய நூலை, உலகம் நல்லாசிரியரை அடுத்து ஓதி உணர்ந்து இன்புறுவதாக.

வாழ்க உலகெலாம்.

புத்தாண்டு வாழ்த்து

ஞானசம்பந்தம் இருபத்திரண்டாண்டு நிறைவெய்துகிறது; இருபத்துமூன்றுவது ஆண்டு பிறந்துள்ளது. தருமையாதீன 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இந்தத் தெய்வீக மாத இதழைத் தோற்றுவித்தருளினார்கள்; ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இதனைக் கண்ணேபோற் புரந்துவருகின்றார்கள்.

உலகச் சூழ்நிலையில் அன்பும், அருளும், அறமுமாகிய மூன்றும் குழைந்த சைவ சமயத்தின் உண்மைகள், உலக வாழ்விற்குப் பெருமருந்து ஆகும் தன்மை உடையவை. இத்தகு மருந்தைத் தக்க முறையில் எடுத்து வழங்குகின்றது இத்திங்கள் இதழ்.

பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சமயப் பெருநூல் விளக்கங்களையும், அரியநூல் வெளியீடுகளையும், சிறப்புடைய கவிதைகளையும், வேதாகம உபநிடத விளக்கக் கட்டுரைகளையும் கொண்ட ஞானசம்பந்தம் இதழ்கள் தமிழ்கூறு நல்லுலகெங்கும் பரவி நறுமணம் கமழ்ந்து வருதல் கண்கூடு.

பன்மொழிப் பேரறிஞர்களின் பாராட்டுக்களும் அறிவுரைகளும் அவ்வப்போது இவ்விதழ்க்குக் கிடைத்துவந்திருக்கின்றன.

இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சான்றோர்களால் அவ்வப்போது இவ்விதழில் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுடைய அருளுரைகளாம் சொற்பொழிவுகளை அவ்வப்போது குறிப்புக்கள் எடுத்து எழுதப்பெற்ற அருளுரைக் கட்டுரைகளை வெளியிட்டு, "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும்" அவர்கள் சொல் வன்மையை நம் வாசக நேயர்களுக்கும் கருத்து விருந்தாக வெளியிட்ட பெருமை நம் இதழ்க்குண்டு. "செந்தமிழ்ப் பூம்பொழில்" என்னும் பெயருடன் அவை வெளிவந்துள்ளன. உரைநடையிலமைந்த இப்பண்டார சாத்திரங்கள் அன்றியும்

சென்ற ஆண்டில் தொடர்ந்து, பன்னிரண்டு திருமுறைகளினின்றும் அருள்வளத்தால் எடுத்துத் தொகுத்த திருமுறைக் கட்டுரைகளும் அவர்களது பேரருள்தாங்கி வெளிவந்தமையை அன்பர்கள் அறிவர். இந்த ஆண்டில் தொடர்ந்து பதினன்கு சாத்திரங்களை விளக்கும் அருளுரைகளை வழங்கத் திருவுளங்கொண்டமைக்கு வாசக நேயர்களின் சார்பில் அவர்கள் திருவடிகளுக்கு வணக்கங்களைப் பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கின்றோம்.

தொல்காப்பியம் தமிழ் இலக்கண முதனூல்; சங்கநூல்கள் தமிழ்ப் பழமை உடைய திருநூல்கள். இவைபற்றிய நம் இதழில் வெளிவந்த விளக்கக்கட்டுரைகள் அன்பர்களுக்குப் பேரின்பமும் பெரும்பயனும் விளைத்துவந்தன • வருகின்றன என்பதை அவ்வப்போது அவர்கள் நம் அலுவலகத்துக்கு எழுதிய கடிதங்களால் அறிந்து மகிழ்கின்றோம்.

திருத்தருமையாதீனத்திலும், ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களிலும் முன்கூட்டியே நிகழும் நிகழ்ச்சிகளை அறிந்துகொண்டு கலந்து மகிழவும், நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிந்து மகிழவும், செய்திகளை அவ்வப்போது வெளியிட்டுவரும் விழுப்பமும் நம் இதழ்க்குண்டு.

யாத்திரை நூல்கள் தமிழில் இல்லையென்ற குறை பலர்க்குள்ளது. இக் குறையைப் போக்கிய பெருமையும் நம் இதழ்க்குரியதேயாகும். திருக்கயிலாயம், திருக்கேதாரம், பதரிநாதம், அமரநாதம் முதலிய பல யாத்திரை நூல்களைக் கட்டுரைகளாக்கித் தந்துவரும் சிறப்பு அனைவரும் அறிந்தது ஆகும்.

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகவும் பின்னைப்புதுமைக்குப் பின்னைப் புதுமையாகவும் உள்ளவன் இறைவன்; ஆதலால், புதுமைக் கவிதைகளையும் வரவேற்கும் பரந்த மனநிலை அனைவர்க்கும் வேண்டும்; அப்போதுதான் 'வளரும் தமிழை' நாமும் வளர்த்தவராவோம். சுவை கெழுமிய சில சிறு காப்பியங்களை அன்புடன் வரவேற்று வெளியிட்டிருக்கிறோம் நாம்; இவ்வாறே சிறுகதை, புதினம், நாடகம் முதலிய பல புதுமைக் கலைகளையும் ஊக்கிவரும் பெருமை இத் தெய்வீகக் கலையிதழ்க்கு உரியதாகும்.

The Vedas and the Agamas, Essence of Saivaism, The four stages in the worship of Lord Siva, The Philosophy of Saiva Siddhanta, The four Paths, Gleanings

from Saiva Siddhanta, The Ancient Tamils and the Vedic faith, Sivagnanabotham and Ragu and Kethu. முதலிய உலகப்புகழ்பெற்ற ஆங்கிலக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறோம் நாம்.

செப்பறைச் சுவாமிகள் உரை, தேவிமான்மியம் முதலிய கிடைத்தற்கரிய நூல்களை இவ்விதழே முதன்முதல் வெளியிட்டது.

வருங்காலத்தை அறிந்து வருமுன்னர்க் காத்தல் அறிவுடைமை ஆதலால், எல்லோர்க்கும் சோதிடத்தில் ஆர்வமும் விருப்பமும் உண்டாதல் இயற்கை. தருமையாதீன ஜோதிஷார்ணவத்தைக் கொண்டு கோசாரபலன் காட்டி அன்பர்களுக்குச்சோதிட நெறிகாட்டி, இன்புறுத்தும் கட்டுரையை மறப்பாரும் உண்டோ? ஒவ்வொரு மாதமும் எப்போது வரும் ஞானசம்பந்தம் என்று ஆர்வத்துடன் காத்திருந்து வந்தவுடன் தம் எதிர்காலப்பகுதி எப்படியிருக்கிறது என்று பாராத வாசக நேயர்கள் இலர் என்பதை இந்நேரத்தே மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு புத்தாண்டு பிறக்கும் இம் மகிழ்வு நேரத்தில் ஞானசம்பந்தம் நேயர்களுக்கு நம் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவடிகட்கு எம் மனமொழி மெய்களாலாகிய வணக்கங்களைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

வாழ்க சைவசமயம் !

வாழ்க குருபக்தி !

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

இன்று பழம்பெருமை வாய்ந்த இத்திருக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்யும் பேறுபெற்றேன். இக்கோயில் சுற்றுப்புறமும் உட்பிரகாரங்களும் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நல்லமுறையில் அமைதியாக வழிபாடு செய்வதற்கு நிர்வாகஸ்தர்கள் மிகவும் பரிவுடன் உதவிசெய்தார்கள்.

(Sd.) தா. கிருஷ்ணசாமி,

10—11—63 Controller of weights and Measures,
Madras.

"ஞானசம்பந்தம்" மாத இதழை
இருபத்திரண்டாண்டுகளுக்கு முன் தொடங்கியருளிய
தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

கிருபை வழங்கும் சரபர் திருவுரு

தருமையாதீனத்தில்

பதினெட்டுக் கரத்துடன் பக்தர்கட்கருளும்
கொற்றவைத்தாயின் குளிர்தரு கோலம்

பதரிநாதர் முன் பைந்தமிழ்த் தருமைக் கயிலைக் குருமணி



செல்வமுத்துக்குமரச் செவ்வேள் திருவுரு



காலனைக் கடிந்த கண்ணுதற் கடவுள்



ஆரருள் வழங்கும் அபிராமியம்மை



கயிலைக்குருமணி கனகாபிஷேகம்

கயிலைக்குருமணி கருணைக்கோலம்

அருள்வாக்கு - IV

திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ.,

இன்பமும் துன்பமும் கலந்ததுதான் இவ்வுலகம். துன்பக் கலப்பே இல்லாத இன்பம் வேண்டும் என்று நினைப்பதும், இன்பமே இல்லாத துன்ப வாழ்க்கை ஒருவருக்குக் கிடைத்துள்ளது என்று நினைப்பதும் முற்றிலும் தவறு. பகலையடுத்து இரவும், குளிரையடுத்து வெய்யிலும் அமைந்து இருப்பது போல, இன்பமும் துன்பமும் அடுத்தடுத்தே வருகின்றன. என்றாலும், நம்மில் பலர், வாழ்க்கையில் துயரம் நேரும்பொழுது எல்லையில்லாத கவலைக்குள்ளாகி, உலகமே அஸ்தமித்துவிட்டது என்றுகூட நினைக்கின்றோம், பேசுகின்றோம், புலம்பவும் செய்கின்றோம். இத்தகைய துயரம் காரணமாக, அறியாமையுடைய ஒரு சிலர் தங்களுடைய உயிரையும் மாய்த்துக்கொள்கின்றனர். போதாக்குறைக்குப் பிறந்ததிலிருந்து துன்பத்தை அன்றி வேறு ஒன்றையும் தாம் அனுபவித்தது இல்லை என்றும்கூட எழுதி வைத்துவிட்டுத் தம் உயிரைப் போக்கிக்கொள்கின்றனர். ஓரளவு பொறுமையோடு நன்கு ஆராய்ந்தால், இது எவ்வளவு பொய்யானது என்பது நன்கு விளங்கும். நம்முடைய பெரியவர்கள் ஒவ்வொருவரும் அனுபவித்து இருக்கின்ற துன்பத்தை நாம் அனுபவிக்கும் துன்பத்தோடு ஒப்பு நோக்கினால் நம்முடைய துன்பம் எவ்வளவு சாதாரணமானது, அற்பமானது என்பதும் நன்கு விளங்கும்.

வயது முதிர்ந்த பெரியவராகிய அப்பர் சுவாமிகளேகூட, ஆண்டவனே நீ என்னைப் படைக்காமல் இருந்திருந்தால் உலகத்தில் உள்ள துன்பங்கள் எல்லாம் யாரிடம் சென்று முறையிடும் ? என்ற கருத்தில் "என்னை வகுத்திலையேல் இடும்பைக்கு இடம் யாது சொல்லே ?" என்று பாடுகிறார். ஆகவே, உலகத்தில் உள்ள துன்பங்கள் எல்லாம் தம்மிடத்தில் வந்து ஒன்றாகக் குடிபுகுந்துவிட்டன என்று அப்பர் பெருமானே பாடுவாரானால், நாம் எம்மாத்திரம் ? என்றாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் வாழ்வில் ஓர் குறிக்கோளை வைத்துக்கொண்டு, அந்தக் குறிக்கோளை அடையும் நெஞ்சு உரத்துடன், பெரியவர்கள் வாழ்ந்தனர்.

கல்லொடு கட்டிக் கடலில் போட்டாலும், பாற்சோறு என்று சொல்லி நஞ்சு கொடுத்தாலும் அப்பர் சுவாமிகளைப் போல அஞ்சாது அவற்றை ஏற்றுக் கொள்கின்றவர்களையே பெரியவர்கள் என்று சொல்லுகின்றோம். அப்படியானால் இத்தகைய துன்பங்கள் அவர்களைப் பாதிப்பது இல்லையா என்றே கேட்கத் தோன்றும். துன்பம் என்பது இருவகைப்படும். ஒன்று உடலைப் பாதிக்கின்ற துன்பம். மற்றொன்று உள்ளத்தைப் பற்றிய துன்பம். உடலைப் பாதிக்கின்ற துன்பத்தைக் கண்டு பெரியவர்கள் அஞ்சுவதே இல்லை. ஏனென்றால் அது உடம்பின் இயல்பான தன்மை என்று கருதிக் கவலைப்படாமல் விட்டு விடுகிறார்கள். காலையில் கதிரவன் கிழக்கே உதிக்கின்றான் என்றோ பனிக்காலத்தில் குளிருகின்றது என்றோ யாரும் கவலையுறுவது இல்லையன்றோ? அதேபோல, பஞ்சபூதங்களாலும் ஆன இந்த உடம்பு துன்பத்தை ஏற்றுக் கொள்வதற்காகவே பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது, எனவே, அந்த உடல், துன்பத்தை அனுபவிப்பதைக் கண்டு அஞ்சுவதும் இல்லை, அதற்காக அரற்றுவதும் இல்லை.

உடல் மனம் என்ற இரண்டிற்கும் துன்பம் ஏற்படுகிறது என்று காண்கிறோம். உடலுக்கு ஏற்படுகின்ற துன்பத்தைக் கண்டு பெரியவர்கள் கவலைப்படுவதில்லையென்றும் கண்டோம். ஆகவே, மனத்துன்பம் ஒன்றுக்கு மட்டும் தான் பெரியவர்கள் அஞ்சுகிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால் தாங்கள் படுகின்ற துன்பத்திற்குப் பிறர் யாரும் காரணம் என்றோ, பிறரால் இத்துன்பம் தங்களுக்கு ஏற்படுகிறதென்றோ பெரியவர்கள் நினைப்பது இல்லை. ஆகவே தான் பிறருடைய குற்றத்தைப் பொறுக்கின்ற இயல்பு பெரியவர்களுக்கு இயல்பாகவே அமைந்துவிடுகிறது.

"இவன் கொல்லப்பட்டான் என்று நினைப்பவனும், இவன் கொன்றான் என்று நினைப்பவனும், தவறு உடையவர்களே. ஏன் என்றால் ஆன்மாவாகிய இவன் கொல்வதும் இல்லை கொல்லப்படுவதும் இல்லை" யென்று கீதை சொல்லிச் செல்கிறது. பெரியவர்கள் தாம் துன்பம் அடையும்பொழுது அந்தத் துன்பத்திற்குப் பிறர் காரணம் என்று நினைப்பது கிடையாது.

தனிப்பட்ட மனிதர்களுக்கோ அன்றி ஒரு நாட்டிற்கோ துன்பம் நேரும்பொழுது, அதுபற்றிக் கூச்சல் இடுவதும்

இன்னாருடைய அறியாமையினால்தான் இத்துன்பம் நேர்கிறது என்று சொல்வதும் எவ்வளவு தவறுடையது என்று இப்பொழுது அறிகின்றோம். ஒருவருடைய அறியாமையினாலே அன்றி ஒருவர் தவறு செய்கின்றதினாலே துன்பம் என்பது தோன்றமுடியாது. நாட்டிற்குத் துன்பம் வருமேயானால் அது நாம் அனைவரும் சேர்ந்து செய்த பிழை என்றுதான் கருதவேண்டுமே தவிர இவர் அவர் என்று தனிப்பட்டவர்களைக் குறைகூறுதல், அறிவுடைமையாகாது. ஒரு மாபெரும் நாட்டுக்கு, அந்த நாட்டிலேயேயுள்ள தனிப்பட்ட ஒருவர் தவறு இழைத்துவிட்டார் என்று சொன்னால் அந்த நாட்டின் அடிப்படையான தரத்தையே குறைத்துப் பேசுவதாகும். துன்பத்தைக் கண்டு அஞ்சுவது எவ்வளவு அறியாமையோ அவ்வளவு அறியாமையுடையதாகும் பிறர்மேல் பழி கூறுவதும். இத்தகைய சந்தர்ப்பங்களில் "இடுக்கண் வருங்கால் நகுக" என்பதே நம்முடைய குறிக்கோளாக இருக்கவேண்டும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Amirthakateswaraswami Devasthanam, Tirucadaiyur.

Visited the temple today with family. The temple is kept neat and clean. The temple Archakars take special interest to provide a good Dharisanam. The superintendant is taking care to see that the pilgrims go with full satisfaction.

I am happy that the things are done in the way it should.

(Sd.) K. S. Subramaniam,
(K. S. Subramania Gounder M. L. A.,)
President Salem Co-op. Central Bank Ltd.,
Kungunapuram (P. O.) Salem Dt.

12—10—63.

சமயமும் இளைஞர்களும்

செஞ்சொற்கொண்டல்

வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.,

நம் இமயப் பெருமலையில் இன்று ஆணவமிக்க அரக்கர் கூட்டம் ஒன்று அணிவகுத்து நிற்கின்றது; அன்பையும், அருளையும், அறத்தையும் ஆயுதங்களாகக்கொண்ட இப்பாரதத் திருநாட்டின்முன் இருப்புக் கருவிகளை ஏந்திப் போர்தொடுத்துள்ளது. இக்கொடும்போர் திருக்கயிலைப் பெருமான் திருவீற்றிருக்கும் திருமலையிலேயே - 'புண்ணியம் திரண்டுளது போல்வது' என்று தெய்வச் சேக்கிழார் பெருமான் பாராட்டிய பெருமலையிலேயே நிகழ்கின்றது. இந்நிலையில் சைவர்களாகிய நாம் 'செய்வினையும் செய்வானும்' முதலிய எல்லாமாகி நிற்கும் நம் இறைவன் இணையடிகளை ஏத்துதலே முறையாகும்; அவ்வாறு தொழும் அடியார்க்குத் துன்பம் இல்லை என்பது பொய்யாவாக்கு. அதனை அறிவுறுத்துகின்ற அறிவுரையையே திருவெண்காட்டிறைவன் நமக்கு அளிக்கின்றான்.

துயரம் அறுப்பான் :

உலகங்கள் எல்லாம் அஞ்சி ஓடித்திரிகின்ற ஒருகாலம் வந்தபோது - ஆலகால விடம் தோன்றியபோது - நம் இறைவன் அன்றோ திருநீலகண்டனாகி அத்துயரம் தீர்த்தான்! உலக பயத்தை நீக்கும் அவ்வொப்பற்ற தனி முதல்வன் அடியார்படும் அல்லல்களை அறுப்பதே தன் கருணைச் செயலாகக் கொண்டவன். அருளுருவாகிய அம்மையொரு பங்கினனாக வந்து ஆளுவான், அவ்வருளியல்பை நமக்கு நினைப்பூட்டி, எம்முயிர்க்கெலாம் இறைவனாக - தந்தையாக உள்ள அவனே இக்காலத்து அடைக்கலப் பொருள் என்று 'அறிவுறுத்துகின்றது இத்திருத்தலத்துத் திருப்பதிகம் : *

" உண்டாய் நஞ்சை; உமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்

---

* திருஞானசம்பந்த சுவாமிகள் - திருவெண்காடு - 2 ஆம் திருமுறை.

அண்டர் வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்டாமரைமேற் கருவண்டியாழ்செய் வெண்காடே''

என்ற காந்தாரப் பண் முதற்பாட்டு மொழியும் பேருண்மை இதுவே எனலாம்; அதுமட்டுமா? 'நவின்றேத்திப் பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கள்மேல் ஏதம் தீர இருந்தான்' என்றும், 'சேவடி கை தொழுவார் உண்முத்தரும்ப உவகை தருவான்' என்றும், 'தொழுவோர் தங்கள் உறுநோய்கள் தள்ளிப்போக அருளும் தலைவன்' என்றும் கூறி, 'அடையா வினைகள்' என்று அரண் அருளியும் அமைந்துள்ள பதிகச் சிறப்பை இளைஞர்கள் ஊன்றி உணர்தல் வேண்டும். "விண்ணமர் பொழில்கொள் வெண்காடு மேவிய, அண்ணலை அடிதொழ அல்லல் இல்லையே' என்றும், 'வேதியர் பரவுவெண்காடு மேவிய, ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே' என்றும் கூறி' இவ்வாறு 'அல்லலும் அருவினையும் அறுதல் ஆணை' என்று உறுதியாகத் திருக்கடைக்காப்பும் அருளியுள்ளதன் மெய்ப்பொருள் உணருந்தொறும் உணருந்தொறும் பேரின்பம் தருகின்றது. இறைவன் திருவருளால் நம் நாடு, ஆணவப் பிடியினின்றும் அகன்று அன்புநெறி நின்று வாழ, எல்லோரும் கூடி வேண்டுவோமாக.

நாட்டு நலம் பேணல்:

சமயநெறி நிற்போர்க்கு நாட்டுநலம் குறித்து நாட்டம் இல்லாமல் இருந்ததில்லை! நாடு வாழவேண்டும்; நாட்டுமக்கள் நலிவு மெலிவுகளின்றி வாழவேண்டும் என்ற நோக்கு நம் சமயத்தலைவர்கட்கு என்றுமே உண்டு. இல்லையேல், நாட்டுப் பஞ்சத்தின் பொருட்டு இறையருள் வேண்டிப் பாடிப் படிக்காசு பெற்று மக்கட்பணி புரிந்திரார் அச்சான்றோர். சிவநெறி நின்ற மன்னர் பெருமக்கள், அறநெறி நின்று பணிபுரிந்ததுடன் மக்களைக் காக்கும் பணியும் மறந்தாரல்லர்;

" மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங் காவலன்"

" அறம்பொருளின்பமான அறநெறி வழாமற்புல்லி
மறங்கடிந்தரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்"

எனவரும் சேக்கிழார்பெருமான் திருவாக்குகள் இதனை நன்கு விளக்கும். ஆதலின், சமயநெறிநிற்கும் இளைஞர்களும் நம் நலம் குறித்து நற்பணிகள் தலைப்படுதல் தக்கதொன்றேயாகும்

இளைஞர்க்கேற்ற இனிய பண்புகள் :

இனி. இக்கால இளைஞர்களின் பொதுவான நிலையாது? வருந்துதற்குரியதாகவே உள்ளது. சமயப்பற்றுக் குறைந்து வரும் நிலையில் உள்ளார்கள். இதற்குப்பல குறைகள் உள்ளன. அக்குறைகளைக் கண்டறிந்து தீர்த்தாலொழிய இளைஞர் நிலை மாறாது. சமயத்தில் உண்மையான பற்றும், ஆர்வமும், சமயப் பெரியோர்களிடத்து மெய்யான அன்பும், நம்முன்னோர்களது அருங்கொள்கைகளை முறையாகத் தெளியும் அறிவும், இளைஞர் களிடத்து மிகுதியாக நிலைபெறவேண்டும் ;

"தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா ; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா"

என்று ‡ உமாபதிசிவம் ஓதியருளியதை இளைஞர்கள் நன்கு உணர்ந்து பின்பற்றுதல்வேண்டும் என்பதே என்னுடைய பேரா வல்; இளமை கூரிய கத்திமுனைபோன்றது ; அதனை நேரிய நெறி யில் - மிக விழிப்பாகப் போற்றிவருதல் வேண்டும். இளைஞர்கள் பழையவை என்பதனால் எவற்றையும் புறக்கணித்துவிடுதலும், புதியவை என்பதனால் எவற்றையும் பேணிக்கொள்ளுதலும் பெருந்தவறானவை, 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற நெறியிலே நிற்கத் தவறுதல் கூடாது ; நம்நாட்டின் பழம்பெருந் தத்துவக் கருவூலங்களைப் பயன்படுத்த ஊக்கமும் உற்சாகமும் கொண்டு கிளர்ந்தெழல் வேண்டும். அப்போதே நம் சிவநெறி யின் சிறப்புக்களை இளைஞர்கள் நன்கு உணர்ந்து தெளிய இய லும். ஆதலின் நம்நெறியின் சிறப்பியல்புகள் பலவற்றை இங்குச் சுருக்கிச் சிந்திப்போம் :

சிவநெறிச் சிறப்பியல் :

இச் சிவநெறியின் சீரிய கொள்கைகளில் நெஞ்சைப் பறி கொடுத்தவர்கள் பலர். ஐரோப்பியத் தத்துவப் பேராசிரியர்கள் பலரும் இவ்வருநெறியின் சிறப்பியல்புகளில் பெரிதும் ஈடுபட் டார்கள். ஜி. யூ. போப்பின் வாய்மொழி இது :- "It is the choicest Product of the Dravidian (Indian) intellect ; The Saiva siddhanta is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India."

‡ சிவப்பிரகாசம் - திருவிருத்தம் 12.

சைவ இளைஞர்களே! எப்.ஃ. குட்வில் என்பாரின் வார்த்தைகளையும் கேளுங்கள் :- "Those who have studied the system, unanimously agree that this eulogy is not a whit too enthusiastic of free-worded. That the system is eclestic is at once apparant."

டபிள்யூ. எப்.ஃ. கௌடி என்பார் தரும் கருத்துரை இது :- "There is no school of thought that comes to us with anything like the claims of the Saiva Siddhanta."

இத்தகு பெருமைஉடைய இந்நெறி காலத்தால் மூத்தது; கருத்தாலும் மூத்தது; சீலத்தால் மூத்தது; செம்மையினலும் மூத்தது என்பது உலகப் பேரறிஞர் முடிவு. உலகு, உயிர், இறை என்ற முப்பொருள் உண்மை நம்நெறியின் அடிப்படை.

தோன்னெறிக் கோட்பாடு :

சங்கநூல்கள் என்று கூறப்பெறும் பழந்தமிழ்ப் பனுவல்களிலேயே இந்நெறியின் சாத்திரக் கருத்துக்களைக்காணலாம். அச்சான்றுகளால், தத்துவ அடிப்படையிலான இத்திருநெறி இந்நாட்டின் பழம்பெருந் திருநெறி என்றுணரலாம். கிறிஸ்து நாதர் காலத்திற்குப் பெரிதும் முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்டே இந்நெறி பிறங்கிவந்த ஒன்று என்பது வல்லார் வாய்ச்சொல். எடுத்துக்காட்டாக ஓரிடம் மட்டும் இங்குக் குறிப்பாம்.

" நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே *

இத்திருப்பாடல் சங்கநூற்காலத்தே திருந்திய சைவசமயக் கோட்பாடு நிலைபெற்றிருந்ததென்பதற்குச் சான்றாகும். 'உமையம்மையைத் தன் ஒரு கூருகவுடைய சிவபிரான் திருவடி நிழற்கீழ் மூவகை உலகும் முறையே தோன்றி நிலவுவ ஆயின' என்ற கருத்தை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். மண், விண், பாதலமாகிய மூவகையுலகும் தோன்றிய முறையாவது: பாதலத்து வாழும் உயிர்கள் தாம் செய்த நல்வினைப்பயன் நுகர்தற்கு மண்ணுலகும், மண்ணுலகத்துயிர்கள் அது செய்தற்கு

* ஐங்குறுநூறு - பா. 1.

விண்ணுலகும் தோன்றியமுறை என்பர் பேராசிரியர் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.† இத்தகு தெளிவுடைய கோட்பாடு அக்காலத்தே நிலைபெற்றிருந்ததெனின் வேறு என் கூறுவது ?

அகப்பண்பாடு வளர்தல் :

சங்ககாலத்திற்குப் பின்னர் கி. பி. 6, 7, 9ம் நூற்றுண்டுகளிலும், கி. பி. 12, 13, 14ம் நூற்றுண்டுகளிலும், கி. பி. 16, 17, 19ம் நூற்றுண்டுகளிலும் சைவசமயப் பெருந்தலைவர்களும், சைவசமயப் பேரிலக்கியங்களும் பெருகியதால், நம்சமயம் நிலைபேறு எய்திற்று. நூற்பரப்பும் விரிந்தது; பன்னிரு திருமுறைகள், பதினன்கு சாத்திரங்கள், இராமலிங்க அடிகள் - தாயுமானவர் பாடல்கள், முதலிய பக்தி இயக்க அடிப்படை அருள்நூல்கள் இக்காலப்பரப்பில் நம்நாடு பெற்றுள்ள திருவருட் பிரசாதங்கள், இளைஞர்கள் இவற்றை உணர்ந்து ஓதுதல் வேண்டும். நல்ல அறிவுடைய சான்றேர்களையடுத்துப் பொருளுணர்ச்சியோடு இவற்றைப் பயின்றல்தான், அகவாழ்வு பண்படும். புறவாழ்வு மட்டும் பண்பட்டாற் போதாது; அஃது ஒரு பொய்த்தோற்றமாகும். மேலே ஆறியதுபோன்று தோற்றமளித்து உள்ளே புரையோடியிருக்கும் கொடும்புண் எப்படியோ, அப்படியே இதுவும் எனலாம். ' உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியருக்கு, எள்ளும் திறம் ஏதும் இல்லை ' என்பது நம்நெறி; ' பூசும்நீறுபோல் உள்ளும் புனிதர்கள் ' என்பது தெய்வச் சேக்கிழார் திருவாக்கு. ஆகவே அகம் பண்படுதலே இன்றியமையாதது என்று விளக்கத் தேவையில்லை. இப்பண்பாட்டைச் சைவ இளைஞர்கள் நம் தோத்திர சாத்திரங்களை உணர்ந்து ஓதுதலான் இனிது எய்தலாம். பண்பாட்டாற் சிறந்தவரே ' மனிதரில் தலையான மனிதர் ' என்ற சிறப்பிற்குரியவராவர். இப்பண்பாட்டை எய்தவேண்டும் என்ற உயர்குறிக்கோளை உடையவராகச் சைவ இளைஞர்கள் ஒழுகுதல் வேண்டும்.

" ஞானநூல் தனையோதல், ஓதுவித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல், ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞானபூசை ;

---

† ஐங்குறுநூறு - ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் உரை நோக்குக.

ஊனமிலாக் கன்மங்கள் தபஞ்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போகம்
ஆனமையான் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம் "[1]

" இறைவனடி ஞானமே ஞானம் என்பர் "[2]

" ஞானத்தால் தொழுவார்சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனை நானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தாய் உனை நானும் தொழுவனே "[3]

" ஞானப் பெருங்கடற்கோர் நாவாயன்ன, பூரணன் "[4]

என்னுந் திருமொழிகள் இளைஞர்கள் இதயத்திருத்தவேண்டியவை. ஞானநூல்களை ஓதுத்தும், ஓதுவித்தலும், நல்லபொருள்களைக் கேட்டலும், கேட்பித்தலும், சிந்தித்தலும் ஆகிய ஐந்தும் இறைவன் திருவடிகளை எய்துவிக்கும் 'ஞானபூசை' என்று தெளிதல் வேண்டும். [தொடரும்]

---

[1] சிவஞானசித்தியார் - சுபக்கம் 23.
[2] ,, ,, 27.
[3] அப்பர் தேவாரம் - 5-91-3.
[4] ,, - 6-8-3.

வரப்பெற்றோம்

1. முருகன் இரட்டை மணிமாலை : கவிஞர். கந்ததாசன் ; கிடைக்குமிடம் :- 27, இலக்குமிநாராயணபுரத்தெரு, மதுரை - 1 ; பக்கம். 24 ; விலை : 25 காசு.

2. திருவொற்றியூர் தேவாரம் - விரிவுரை : குகஸ்ரீ ரசபதி ; வெளியீடு :- கருப்பண முதலியார், 53, கிடங்குதெரு, சென்னை-1.

முன்னது இப்போதுதான் கவியெழுதத் தொடங்கியிருப்பவருடைய பாடல்களைக் கொண்டது ; அதனால் பல பிழைகளைக் காண்கின்றோம் ; இருப்பினும் அன்பு பாராட்டத்தக்கது. பின்னது ரசபதி எழுதும் மிக எளிய உரை ; பாமரர்க்கும் விளங்கும் படி எழுதப்பட்டுள்ளது. — " கவிஞர் "

சிவஞானபோதச் சிற்றுரை

இலக்கணக் குறிப்பு — விளக்கம்

சைவசித்தாந்தவித்தகர், வித்துவான்.
திரு. வை. சுந்தரேச வாண்டையார்

(மலர் 22, இதழ் 11, பக்கம் 588 இன் தொடர்ச்சி)

சூத்திரம் மூன்று

" இது பூட்டுவிற் பொருள் கோள் " - என்றார்.

இதற்கு விளக்கம் :-

ஒரு பாட்டின் ஈற்று மொழி, அப்பாட்டின் முதன் மொழி யோடு இயைந்துப் பொருள் கொள்வது (அந்வயிப்பது).

உதாரணம் :-

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம் — உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் தமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

(முத்தொள்ளாயிரம்)

என்னும் வெண்பாவில் கதவு *திறந்திடுமின்* என்று பொருள் கொள்ளக் கிடந்தமை அறிக.

அதுவேபோல,

உளது இலது என்றலின்.........ஆன்மா.
என்பதில் ஆன்மா உளது, இலது என்னப்படுதலால்,
எனப் பொருள் கொண்டமை யறிக.

முதல் அதிகரணம்

" அனைத்து நின்றென்புழி முன்னர்க் கண்ணுருபும், பின்னர் ஆக்கச் சொல்லும் தந்துரைக்க. தற்பரம் என்றது குறிப்பேது வாய் நின்றபெயர். " என்றார்.

இவைகட்கு விளக்கம் :-

அனைத்தும் நின்று என இரண்டிடத்தும் வருகின்றது. இவ்வெண்பாவில் முன்னதை (நின்று அனைத்தும் என்பதை) அனைத்தும் + நின்று எனக் கூட்டி, ஏழனுருபு விரித்து, அனைத்தின்கண்ணும் நின்று = (உடல், பொறி, விடயம்) அனைத்தின் கண்ணும் (அது அது தானாக) நின்று எனத் தந்துரைக்க.

பின்னது, இரண்டாம் அடியிலுள்ள, அனைத்தும் + நின்று = ஆக்கச் சொல் + ஆய் என்பது தந்துரைத்து அனைத்தும் ஆய் நின்று எனக் கொள்க.

தற்பரம் - மாயைக்கு அதீதமாகிய சிவம்.

தத் - அது. எது ? மாயை.

பரம் - மேலானது ; அப்பாற்பட்டது. அது எது ? சிவம். இங்கு மாயையென்பதும் சிவம் என்பதும் குறிப்பான் அறிய வைத்தலின் குறிப்பேதுவாய் நின்ற பெயர்.

மூன்றும் அதிகரணம்

" ஆகியென்னுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினை யோடு முடிந்தது. " இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறு பறையறைந்தும் விளையாடுப " என்றாற்போல, ஆயென்பது வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க. அவ்வஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரான் அஞ்செழுத்தென்றார். அஃதிருமடியாகுபெயராய், ஐம்பொறியின் றொழிற்பாட்டை யுணர்த்திநின்றது " என்றார்.

இவைகளுக்கு விளக்கம் :-

சிற்றிலிழைத்தல் (இவள்) பெண்பாற்கேயுரிய சிறப்பு வினை.

சிறுபறையறைதல் (இவன்) ஆண்பாற்கேயுரிய சிறப்புவினை.

விளையாடுதல் - இருபாற்கும் பொதுவினை. இவள் சிற்றி லிழைத்து விளையாடுவாள், இவன் சிறுபறையறைந்து விளையாடு வான். இவ்விரு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாய் அமைத் துக் கூறின், இவளும் இவனும் முறையே சிற்றிலிழைத்தும், சிறு பறையறைந்தும் விளையாடுவர் என்னல் வேண்டும். இதனுள் தனித்தனி இரு சிறப்பு வினைகள் ஒன்றுபட்டு ஒரு பொதுவினை கொண்டமைபோல.

" ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலன் ஆய் "

இதற்கு விளக்கம் :-

ஒன்றறிந்த தொன்றறியாதாகி - ஒரு பொறியாகிய கண் அறிந்த உருவத்தை மற்றொருபொறியாகிய (காது அறியாதாகி,) மற்றொரு புலனாகிய மூக்கு அறியும் மணத்தை ஒரு புலனாகிய (கண் அறியாதாகி) இவை நகவளைவில் உள்ளவை ஒன்றற்கே யுரிய சிறப்புவினை. அவ்வெண்பாவில் இரண்டாமடியில் அன் றும் புலனாய் என்னும் பொதுவினை கொண்டமை அறிக. ஆய் என்பது வினைத்தொகை.

" ஒன்றறிந்ததென்னும் வெண்பாவின் இரண்டாமடியில் வரும் ஆய் + அஞ்செழுத்தை என்ற தொடர் வினைத்தொகைத் தொடர். உண்கலம் - வினைத்தொகை. உண்கிற கலம், உண் ணும் கலம், உண்ட கலம் என்னும் பொருளுக்குப் பொது. அதுபோல, ஆய் அஞ்செழுத்து - ஆராய்ந்தறிகின்ற அஞ்செ ழுத்து " ஆராய்ந்தறிந்த அஞ்செழுத்து, ஆராய்ந்தறியும் அஞ் செழுத்து எனப் பொருள்தந்து நிற்றலை அறிக.

அஞ்செழுத்து இருமடியாகுபெயர் :-

வரை - குறிஞ்சி நிலத்தது என்புழி இருமடி ஆகுபெயர். வரை - கணு. அதனையுடைய மூங்கிலை உணர்த்தலின் ஆகு பெயர். பின்னும் மூங்கிலை உணர்த்தாது, அதற்கிடனாகிய மலையை யுணர்த்தலின் பிறிதும் ஓராகுபெயர். ஆக வரை - (கணு) மலைக்கு ஆங்கால் இருமடி ஆகுபெயராம்.

அஃதேபோல், அஞ்செழுத்து - ஐந்து (எழுத்து) அதைக் குறிக்காமல் அவற்றாற் செலுத்தப்படும் ஐம்பொறிகளைக் குறித் தலால் ஒரு ஆகுபெயர். (காரண ஆகுபெயர் - காரணம்

அதைக் குறிக்காமல் அதனுல் ஆம் காரியத்தைக் குறித்து நிற்றலால்.) பின்னும், ஐம்பொறி - அதனைக் குறிக்காமல் அதன் தொழிற்பாட்டைக் குறித்தலால் பின்னுமோர் ஆகுபெயர். (காரண ஆகுபெயர்) ஆய் + அஞ்செழுத்தை என்பதற்கு ஆராய்ந்தறிகின்ற ஐம்பொறிகளின் தொழிற்பாட்டை என்று பொருள் கொண்டதற்கு இலக்கணங்கூறிற்று.

நான்காம் அதிகரணம்

"உயிர்ப்பவென்றது அன்பெருத அகரவீற்றுப் பலவறிசொல் உயிர்த்தல் தொழிற்படுதல்"

என்ருர்.

இவைகளுக்கு விளக்கம் :-

உயிர்ப்ப - அன்பெறின், உயிர்ப்பன என்று ஆம். ஆகவே உயிர்ப்பன என்ற சொல் வினைமுற்ருே? வினையாலணையும் பெயரோ? என ஐயுருதபடி அது பலவின்பாற் பெயர்ச்சொல் என்ருர். உயிர்ப்பனவாகிய ஐம்பொறிகள் என்று பொருள். உயிர்த்தல் - தொழிற்படுதல்; என்பது (பிணம்போற் கிடவாது) உயிருடைய செயல்களைச் செய்தல். (தொடரும்)

நிர்மலன் அருள்!

கவித்தேன்றல், U. R. உமாநாத தீக்ஷிதர்.

இராகம் : கானடா] [தாளம் : ஆதி

பல்லவி

பாடு பண்ணெடு கூடு பரமனை நாடு
பரவசத்தோடு திருக்கேதார நாதனை வாயாரவே (பாடு)

அநுபல்லவி

பன்னிரு கரத்தானும் பாய்புலிச் சடையானும்
பார்வதி மனமகிழ் பஞ்சமுகத் தானையும்நீ (பாடு)

சரணம்

நினைத்தவை நடந்திடும் நிர்மலன் அருளாலே
நீங்காத துயரெலாம் நீங்கிடும் அவனுலே
நீரணிந்தான் அவன் நெற்றிக்கண் ணுடையானை
நித்தம் நித்தம் நினைந்துநெஞ்சம் உருகியேநீ (பாடு)

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,

வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

(மலர் 22, இதழ் 12, பக்கம் 654 இன் தொடர்ச்சி)

அனேகாந்த வாதம் பொருந்தாமை

மாணக்கன் : பௌத்தர் கூறும் சூனிய வாதம் பொருந்தாமையைக் கண்டு, சமணர் அனேகாந்தவாதம் கூறுகின்றனர். அஃதாவது, 'பொருள்' எனப்படுவது யாதாயினும், உள்ளதோ? இல்லதோ? என வினவுவார்க்குப் பௌத்தர், 'உள்ளதும் அன்று; இல்லதும் அன்று;' என, 'உண்மை, இன்மை' என்ற இருதன்மைகளையும் மறுத்தொழித்து, 'சொல்லொணாதது' என்கின்றனர்; சமணர், 'உள்ளதுந்தான்; இல்லதுந்தான்' என்று, அவ்விரு தன்மையையும் ஒருங்கேற்றுக் கொண்டு, அத்தன்மையுடைய பொருள், தானே தோன்றியழியும் என்பர். 'உள்ளதும் அன்று; இல்லதும் அன்று' என்பவரை எளிதில் மறுக்க முடிகின்றது; 'உள்ளதுந்தான் இல்லதுந்தான்' என்று இரண்டையும் ஏற்றுக் கொள்பவரை மறுத்தல் எவ்வாறு?

ஆசிரியர் : நீ கூறியவாறு பேசும் அனேகாந்த வாதிகளும் ஒருவகைச் சூனிய வாதிகளே யன்றிப் பிறரல்லர்; ஏனெனில், 'உண்மை' என்பதும், 'இன்மை' என்பதும் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறான தன்மைகள்; ஆதலின், அவைகளுள் ஒன்று உள்ள இடத்தில், மற்றொன்று இராது; அங்ஙனமாகலின், ஒருபொருளிலே, அவ்விரு தன்மையும் எவ்வாறிருத்தல் முடியும்? முடியாது? ஆகவே, அனேகாந்த வாதத்தை அறிவுறுத்தும் ஆசிரியரை நோக்கி, மாணக்கர், 'ஒரு பொருள்தானே, உள்ளதாயும், இல்லதாயும் எங்ஙனம் இருத்தல் கூடும்?' என்று வினவில், அவ்வாசிரியர், அவர்கட்கு எங்ஙனம் விடை இறுப்பார்? 'இருத்தல் இயலாதுதான்; ஆனல், இல்லதாயின் தோன்றுது; உள்ளதாயின் தோன்ற வேண்டுவது இல்லை; ஆகையால், அவ்விருதன்மையையும் உடையனவாய், இன்னதெனச் சொல்லொணாதனவாய்த்தாம் பொருள்கள் இருக்கின்றன' ஒன்றுதான் கூற

வேண்டும்; ஆகவே, அவரும், 'சொல்லொணாதது' என்ற பௌத்தர் கொள்கையை வேறொரு வகையில் கூறுகின்றவராகவே ஆகின்றார்.

அஃது எங்ஙனமாயினும்; 'மாறுபட்ட இரு தன்மைகள், ஒருபொருளிலே எங்ஙனம் இருத்தல் கூடும்?' என மேல் வினவிய வினாவிற்கு விடை இன்மையால், சமணர் கூறும் அனேகாந்த வாதமும், மிக எளிதில் மறுக்கப்படுகிறது அன்றோ?

மாணாக்கன்: 'உண்டு, இல்லை' என இரு தன்மையைப் பொருள்களுக்குச் சமணர் சேர்த்துச் சொல்வது, பொருள்களின் ஒரு நிலையிலே என்பதாகத் தெரியவில்லை. எல்லாப் பொருள்கட்கும், 'காரண நிலை, காரிய நிலை' என்ற இரு நிலைகள் உள்ளன; ஒருபொருள் காரண நிலையில் இருக்கும் பொழுது, அது காரண வடிவில் உள்ளதாயும், காரிய வடிவில் இல்லதாயும் இருக்கும்; அங்ஙனமே காரிய நிலையில் இருக்கும் பொழுது காரிய வடிவில் உள்ளதாயும், காரண வடிவில் இல்லதாயும் இருக்கும்; ஆகவே, எப்பொருளும் எந்நிலையிலும் உள்ளதும் இல்லதும் ஆகிய இருதன்மைகளையும் உடையதாயே இருக்கும் என்றே அவர் கூறுவர். அதனை எடுத்துக் காட்டுக்கொண்டு விளக்கினால், 'குடம்' என்னும் பொருள், மண்ணாய் இருக்கும் பொழுது, காரண வடிவில் உள்ளதாயும், காரிய வடிவில் இல்லதாயும் இருக்கும்; அங்ஙனமே குடமாய் இருக்கும் பொழுது, காரிய வடிவில் உள்ளதாயும், காரண வடிவில் இல்லதாயும் இருக்கும்; ஆகவே, மண்ணாய் இருக்கும் நிலையும், குடமாய் இருக்கும் நிலையும் ஆகிய இருநிலைகளிலும் குடம் உள்ளதும் இல்லதும் ஆகிய இருதன்மைகளையும் உடையதாயே இருக்கும். இங்ஙனமே எல்லாப் பொருள்களும் எப்பொழுதும் 'உள்ளதும் இல்லதும்' என்னும் இருதன்மைகளையும் உடையதாயே இருக்கும் என்று விளக்கலாம்.

ஆசிரியர்: 'உண்டு இல்லை (அஸ்தி நாஸ்தி)' என்று கூறும் சமணரது அனேகாந்தவாதக் கொள்கையை மிக நுட்பமாக எடுத்துக் கூறினமைக்கு உன்னைப் பாராட்டுகின்றோம்; ஞானசம்பந்தரோடு வாதிட்ட காலத்திலும் இறுதி வாதமாகிய புனல் வாதத்தில் சமணர்கள், 'அத்தி நாத்தி' என்பதைத்தான் பேருண்மையாக எழுதி, வையையாற்றில் எதிரேறிச் செல்லும் என்னும் உறுதியுடன் இட்டனர். ஆனால், அவ்வேடு அவர்களை நட்டாற்றில் விட்டு, நீர் ஓடிய வழியே ஓடிவிட்டது.

நம் பொறிகளுக்கு அகப்பட்டு அனுபவமாய்த் தோன்றும் பொருள்களை அளவை அறிவு கொண்டு ஆராய்ந்து, அவற்றின் இயல்புகளை அவரவர்கட்குத் தோன்றிய வகையில் வெளியிடு வதில் பெருந்தவறு ஒன்றும் இல்லை. ஆனால், அந்த அறிவைக் கொண்டே, அளவைகட்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு பெரும் பொருளின் தன்மையை அளந்துவிடுவேம் என்று எண்ணுவது தான் தவறு. புனல் வாதத்தில் சமணர்கள் பொருள்களின் இயல்பை, 'அத்தி நாத்தி' என்று எழுதியிட்டதே அவர்தம் தோல்விக்குச் சிறந்த காரணம் அன்று; அளவைக்கு அகப்படாத பரம்பொருளையும் 'அத்தி நாத்திதான் (நிலைபேறில்லாதது தான்)' என்று எழுதியிட்டதே அவர்தம் தோல்விக்குச் சிறந்த காரணமாகும்.

அதனால், அருள் வள்ளலாராகிய ஆளுடைய பிள்ளையார், பொருளியல்புகளை ஆராயும் அளவை முறையில் யாதொன்றை யும் எழுதி இடாமல்,

"எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ"

என்றும்,

"ஏதுக்க ளாலும் எடுத்தமொழி யாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்க லுறுவீர்மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே"

என்றும் (3.54.3,5) அருளிய அரிய அருளுபதேசத்தையே எழுதி இட்டார். உண்மை அதுவே யாதலின், அவ்வேடு ஓடும் நீரைக் கிழித்துக்கொண்டு, அந்நீர் வேகத்தினும் பன்மடங்கு மிகுதியான வேகத்துடன் எதிரேறிச் சென்றது.

சூனிய வாதம், அனேகாந்த வாதம், முதலிய எந்த வாதத் தையும், ஏனைய பொருள்களோடு நிறுத்திக் கொள்ளாமல், பரம் பொருளிடத்திலும் வைத்துக்கொண்டு, அப் பொருளை அனுபவத் தால் உணர்ந்து உணர்த்திவரும் அருளாளர்களைப் பழித் துரைத்தலையே தொழிலாகக் கொள்வதால்தான், சைவசித்தாந் தம், அவ்வாதங்களில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டி மறுக்க முற்படுகின்றது.

சமணர்கள் தாம் கூறும் அனேகாந்த வாதத்தில், 'உண்டு இல்லை' என்ற இரண்டை மட்டும் கூறவில்லை; 'சொல்லொணாது' என்ற அதனையும் சேர்த்துக் கூறுகிறார்கள். அவர்கள், தம் அனேகாந்த வாதத்தை விரிக்கையில், 'உண்டாம், இல்லையாம், உண்டும் இல்லையுமாம், சொல்லொணாதாம், உண்டாம் சொல்லொணாதாம், இல்லையாம் சொல்லொணாதாம், உண்டும் இல்லையுமாம் சொல்லொணாதாம்' என விரித்துக் கூறுவர். ஒவ்வொரு பொருளின் தன்மையையும் இப்படியே சொல்லல் வேண்டும் என்பது அவர்கள் கருத்து. இப்படிச் சொல்வதால் எல்லாருடைய கொள்கைகளும் அடங்கி விடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இதனை, 'சத்தபங்கி நியாயம்' என அவர்கள் பெரிதாக மதிப்பினும், ஒருதலைப்பட்ட முடிவு இன்மையால் அதனைச் சிவநெறியாளர், 'சமுசய வாதம்' (ஐய உரை) என்றே இகழ்ந்து பேசுவார்.

"ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரும்"

என்ற திருவெழுகூற்றிருக்கைத் தொடரில், திருஞானசம்பந்தர், சமணரை, 'ஐயுறும் அமணர்' என்றதையும்,

"உண்டும் இல்லையும் எனத்தடு மாற்றநூ லுரைத்த
பிண்டி யானுரை கொண்டுழல் பேயமண் குண்டர்"

என்று, திருவிளையாடற் புராணத்தில் (மாயப்பசுவை வதைத்த படலம் - 5) பரஞ்சோதிமுனிவர் கூறியதையும் நோக்குக.

அஃது அவ்வாறாக, சமணர் இங்ஙனம் அனேகாந்த வாதம் கூறுதல் ஏற்றுக்கு? 'எல்லாப் பொருள்களும் இச் சத்த பங்கி நியாயத்திற்கு உட்பட்டனவேயன்றி வேறில்லை; ஆகையால், தோன்றி நின்று அழியும் பொருள்கள் தம்மியல்பில் தாமே தோன்றி, தாமே நின்று, தாமே அழிவனவன்றி, அவற்றை அங்ஙனம் செயற்படுத்துவான் ஒருவன் இல்லை' எனக் கூறுதற்குத்தானே?

மாணாக்கன்: ஆம்; அதன் பொருட்டேதான் அங்ஙனம் கூறுகின்றனர். அதனை எங்ஙனம் மறுப்பது?

ஆசிரியர்: 'உண்மையும், இன்மையும் ஆகிய மறுதலைப் பட்ட இருதன்மைகள் ஒரு பொருளில் எவ்வாறிருத்தல் கூடும்?' என வினவுபவர்க்கு 'அவை ஒரு பொருளின்கண் வேறு வேறு நிலைபற்றி இருக்கும்; அஃதாவது, காரணமாய் உள்ளபொழுது

காரியமாய் இல்லை; காரியமாய் உள்ள பொழுது காரணமாய், இல்லை என விடை கூறுகின்றனர். அஃது எப்படிப் பொருந்தும்? காரணத்திற்கும் காரியத்திற்கும் சிறிதும் ஒற்றுமையே இல்லையோ? அவை முற்றிலும் வேறுபட்டனதாமோ? அவை முற்றிலும் வேறுபட்டனவாயின், காரணத்தினின்றும் காரியம் எவ்வாறு தோன்றுகின்றது? 'காரியம் காரணத்தில் இல்லாதிருந்தே தோன்றும்' எனின், அதற்கு, 'இல்லது தோன்றும்' என்றே கூறலாமே? ஆக்வே, முயலின் தலையில் கொம்பு தோன்றாமையால், 'இல்லது தோன்றும்' எனக் கூற அஞ்சி, 'இல்லதும் உள்ளதும் ஆகிய பொருள் தோன்றும்' என்ற ஒரு புதுக் கொள்கையைக் கொண்டால், மாறுபட்ட இருதன்மை ஒரு பொருளில் எவ்வாறு அமையும்? என்ற தடை, விடுக்க முடியாததாகவே ஆகின்றது.

மாணாக்கன்; காரண காரியங்களைச் சமணர் முற்றிலும் வேறுபட்ட பொருளாகக் கொள்ளவில்லை. சிறிது ஒற்றுமையும், சிறிது வேற்றுமையும் உடைய பொருளாகத்தான் கொள்கின்றனர். அதற்காகத்தானே அடிகள் கூறியபடி 'ஆம்' என்னும் அந்தச் சொல்லைச் சேர்த்து, 'உண்டாம், இல்லையாம், சொல்லொணாதாம்' என்பன போலக் கூறுகின்றனர்! 'ஆம்' என்பதற்கு அவர்கள், 'சிறிது' என்ற கருத்துக் கொள்கின்றனர் அன்றோ! ஆகவே, அத்தகைய காரணத்தினின்று காரியங்கள் தோன்றுதற்குத் தடை என்னை?

ஆசிரியர்: ஆம்; நீ கூறியது உண்மையே. ஆயினும் அந்த வாதம் மிக அழகாய் இருக்கின்றது. மண்ணாய் இருக்கும் நிலையில், 'குடம் உண்டோ? இல்லையோ? என வினவினால், 'காரண வடிவில் உண்டாம்; காரிய வடிவில் இல்லையாம்: எனக் கூறும் விடைதானே, 'காரண வடிவிலும் சிறிது உண்டு சிறிது இல்லை; காரிய வடிவிலும் சிறிது உண்டு; சிறிது இல்லை எனப் பொருள் படுமாயின், இது, 'சுற்றிப் போயும் சுங்கத் துறைக்கே வந்தான்' என்பதுபோல, 'மாறுபட்ட இரு தன்மைகள் ஒரு பொருளில் எவ்வாறு இருக்கும்?'' என்ற தடையையே மீண்டும் நிகழ்த்துகின்றது அன்றோ! அதனால், சமணர் கூறும் அனேகாந்த வாதமும் பொருளற்றதே யன்றி, அளவை முறைக்குச் சிறிதும் ஒவ்வாது. ஆகவே, 'உலகம் உள்பொருள்' என்பதை மறுத்து, 'சூனியம்' எனக்கூறும் பௌத்தர் கூற்றுப் போலவே, சமுசயமாகக் கூறும் சமணர் கூற்றும் பொருந்தாமை அறிக.

(தொடரும்)

பெருமழையும் திருமுறையும்

திரு. ஆர். வேலாயுத ஓதுவார்

திருச்சிற்றம்பலம்

வையக முற்றும் மாமழை மறந்து
வயலில்நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற்று எங்களை என்ன
ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும்
பெய்யுமாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூருளானே.

—சுந்தரர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க்கை வளத்தால்சிறப்புறுவது. வளம்! வயல்வளம், மழை வளம், பொருள்வளம் முதலியன. மழைவளம், ஒன்றே ஏனைய வளங்களின் சிறப்பிற்கு உறுதுணையாய்நிற்பது. "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உண்ணின்றுடற்றும்பசி" என்று வள்ளுவரும் அருளினர். இவ்வகையில் வளம்செயப் புகுந்த மழையே, இருவாரங்களாகப் பெய்யும் மாமழையாகிப் பெருவெள்ளமாகியது. ஆங்காங்கு விளைபொருள்கள் என்ன ஆமோ என்று மக்கள் பலரும் அவதிமிக்குறுகின்றனர் என்ப தனை செய்தித்தாள்ச் மூலமும் நன்கு அறிகிறோம். இவ்வகையில் உறுகின்ற துன்பநீக்கத்திற்கு வகைபுரிவதே இத்திருப்பாடல். அகத்தியமுனிவரும் சிவாலயமுனிவர்க்கு இதனைப் பாராயணத் திருப்பாடலுள் ஒன்றாக வகுத்தோதி உணர்த்தி அருளினர்.

பாடற் பொருள் :

செழுஞ்சோலைகளாற் சூழ்ந்த திருப்புன்கூர் உறையும் சிவனே ; இவ்வுலகெலாம் மழையின்றி வயலில் நீரில்லை. பயிர் கள் வாடின. மழைபெய்யச்செய்து எங்களை உய்யும்படி ஆண் டிடுக. மழைபெய்தால் நிலம் தருகின்றோம் என வேண்டினர்

ஆங்கு மின்னல்களோடு உறுமி எழுந்த மேகம்; மிகுந்தநீரைப் பொழிந்து பயிர்கள் அழிந்திடப் பெருவெள்ளமாகியது. அது கண்டு அஞ்சி வேண்டியவர் விரும்பியவண்ணம் மீண்டும் பன்னிரண்டுவேலி நிலங்களை ஏற்று அருள்புரிந்தனை. அத்தகைய உன் அருட்செயலைக் கண்டு நின் திருவடி அடைந்தேன்.

பாடல் வரலாறு:

இது திருப்புன்கூர்ச் சிவனாரைப் போற்றும் திருப்பாடல். திருப்புன்கூர் தஞ்சைமாவட்டத்தில் வைத்தீஸ்வரன்கோவிலுக்கு மேற்கே, ஒன்றரைக்கல் தொலைவில் உள்ள சிவத்தலம். இதனை அருளியவர் சுந்தரமூர்த்திநாயனார். இங்கு அருளாற்போந்த இவர், ஏயர்கோன் கலிக்காம நாயனார்க்கு உற்ற இரும்பிணி நீக்கி அவருடன் ஆலயம் நண்ணி வழிபடுவாராயினர். அது சமயம், அங்குற்ற ஒருசிலர், ஊரில் நீண்டநாட்களாக, மழையே பெய்ய இல்லை. வயல்களில் நீரின்றிப் பயிர்கள் வாடுகின்றன. பெரியீர்! அதற்கு ஆவன, அருள்புரிதல்வேண்டும் என அடிபணிந்து விண்ணப்பித்தனர். செவியேற்ற வன்றொண்டர்; அங்ஙனம் மழைபெய்தால் பன்னிரண்டுவேலி நிலம் தருகின்றோம் என்றனர். உடனே பெய்ய எழுந்த மழை, ஓயாமல் பொழிந்திடவே, எங்கே பார்த்தாலும், ஒரே வெள்ளப்பெருக்கெடுத்து, பயிர்கள் எல்லாம் நீரில் மூழ்கிப்போயின. மழையோ நின்றிலது. இதற்கு என்செய்வது என்று மழை மிகுதியால் உள்ளம் வருந்திய அவர்கள், வகை ஏதும் இலராகி மீண்டும் சுந்தரரைப் பணிந்து, மழை பொழிந்ததுபோதும், எங்கும் பெருவெள்ளம். சுவாமி! இதனை எப்படியாவது நிற்கப்பணித்தருள வேண்டும். அதற்கெனப் பின்னும் பன்னிருவேலி நிலம் தருகின்றோம் என்றனர். அவ்வகையே இறைவர் அருளால் மழையும், பொழிதலை நிறுத்திற்று. இவ்வகையில் அருளைச் சுரந்த இறைவர் அருளினை எண்ணி அன்பு மிகுந்த சிந்தையராகிய சுந்தரர்; இறைவா! நின் சீலங்கண்டு திகைப்பொன்றுமின்றி நின் திருவடி அடைந்தேன், அடியார்க்குற்ற துன்பம் நீக்கி அருளைப்புரிவதே நின் செய்கை எனக்கண்டேன். உற்ற சிந்தை கொண்டடைந்தேன், என இப்பாடல்கொண்டு இன்புறப் போற்றி அருளினர்.

சிறப்பு:

அன்றுமுதல் இன்றுவரை மழை; பெய்யவேண்டுமானாலும் பெருமழை பொழிதலை நிற்கும்படிச்செய்ய வேண்டுமாயினும்

இப்பாடல் திருப்பதிகப் பாராயண வழிபாடு நிகழ்த்தி அன்பர் பலரும் பயனுறக் காண்பது ஆன்றோர்கண்ட முறைமை.

பயன் :

இத்தகைய திருப்பாடலின் சிறப்பினைச் சிந்தித்து அன்பர் பலரும் அன்புகொண்டு ஓதி வழிபட்டுப் பயனுறுவார்களாக என்பது அவ்வகை வழிபாட்டில் திளைத்து உளம் சிறந்துருகி மெய்ப்பயன் கொண்டருளும் தருமையாதீனம். எங்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருவுள்ளம்.

வாழ்க திருவடி !

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

"Happy and fortunate to visit this temple again, soon after Kumbabishekam and to have a good dharsan of the deities.

I pray for peace and happiness for the people.

(Sd.) S. Sellapandian,
4—11—63. Speaker, Madras Legislative Assembly,
Madras.

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

வைத்தியநாதசுவாமி தையல்நாயகி அம்பாள் தரிசனம் செய்யும் பாக்கியம் இன்று எனக்குக் கிடைத்தது. ஆலயம் மிகவும் சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது. இங்கிருக்கும் கட்டளைத் தம்பிரான் அவர்களுக்கும் மற்றும் சிப்பந்திகளுக்கும் இது மிகவும் பெருமை தரக்கூடிய அம்சமாகும். அவர்கள் பணியை மிகவும் போற்றுகின்றேன்.

(ஒ-ம்.) பி. செந்தில்நாயகம்,
8—11—63. டிஸ்டிரிக்ட் ரெவின்யூ ஆபீசர், தஞ்சாவூர்.

சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 22, இதழ் 11, பக்கம் 596 இன் தொடர்ச்சி)

नवाष्टसप्तहस्तैर्वा श्रेष्ठमध्य कनीयसम् ।
तद्वद्दुकूलं रक्ताद्यैर्वर्धन्यां वेष्टयेत् गुरुः ॥ 241

विद्येश कलशानां तु षट्कहस्तं पृथक् पृथक् ।
कलशानां तु सर्वेषां चतुर्हस्तं विधीयते ॥ 242

முன் கூறப்பட்டபடி இல்லாவிடில் ஒன்பது முழம், அல்லது எட்டு முழம் அல்லது ஏழுமுழம் நீளமுள்ளதான வஸ்திரத்தையும் சிவகும்பத்திற்குக் கட்டலாம். இதுவும் உத்தமம், மத்தியமம் அதமம் என்ற மூன்று முறையை உடையதாகும். இதுபோல் சிவப்பு வர்ணமுடைய வஸ்திரத்தை வர்த்தனி கலசத்திற்குக்கட்ட வேண்டும். வித்யேச கலசங்களுக்குத் தனித்தனி அவ்வாறு முழமுள்ளதான வஸ்திரத்தைச் சாத்தவேண்டும், மற்றய பரிவார கலசங்கள் எல்லாவற்றிற்கும் நாலு நாலு முழமுள்ளதான வஸ்திரத்தைக் கட்டவேண்டும். இவ்வாறு கலசங்களுக்குச் சாத்துவதுபோல் வேதிகைகளுக்கும் வஸ்திரம் சாத்தவேண்டும்.

त्रिंशद्धस्तं चोत्तमं स्यात् मध्यमं पञ्चविंशतिः ।
अधमं विंशतिः प्रोक्तं षट्तालं च सुविस्तृतम् ॥ 243

वेद्यावृति समं वस्त्रं निश्छिद्रं तेन वेष्टयेत् ।
एवं वस्त्र विधिःप्रोक्तो पञ्चमुद्राविधिर्भवेत् ॥ 244

வேதிகைக்குக் கட்டவேண்டியதான வஸ்திரமானது முப்பது முழமுள்ளதாக இருக்கவேண்டும். இது உத்தம பக்ஷம். இருபத்தி ஐந்து முழ நீளமுள்ளது நடுத்தரம். இருபது முழ நீளமுள்ளது அதம பக்ஷம். இவைகளின் அகலம் ஆறுசாண் இருக்கவேண்டும். மற்றும் வேதிகையைச் சுற்றி மறைப்பதற்குத் தகுதியுள்ளதாய் துவாரமில்லாததாய் இருக்கவேண்டும். இத்தகைய

வஸ்திரத்திஞல் இடைவெளி தெரியாமல், சுற்றிக்கட்ட வேண்டும். இவ்வாறு வஸ்திரங்களின் இலக்கணக்கூறி இனி ஆசாரியர்களுக் குரியாதான பஞ்ச முத்திரையின் இலக்கணமானது கூறப்படுகிறது.

रुद्राक्षमुपवीतं च सोष्णीषश्चोत्तरीयकम् ।
भस्मालश्च शैवानां पञ्चमुद्राः प्रकीर्तिताः ॥ 245

ருத்ராக்ஷமாலே யக்ஞோபவீதம், சிரசில் கட்டிக்கொள்ளும் வஸ்திரத்துடன் உத்தரீய வஸ்திரம், விபூதிப்பை என்ற இவைகள் ஆதி சைவர்களுக்கும் பொதுவாக சைவர்களுக்கும் ஐந்து அடையாளங்களாகும்.

विभीतिफलं वद्धार्यं द्वात्रिंशत् स्कन्धदेशके ।
अष्टोत्तरशतं प्रोक्तं रुद्राक्षं मालयान्वितम् ॥ 246

अक्षसूत्रं प्रकर्तव्यं सप्तविंशतिभिः क्रमात् ।
शुक्लयज्ञोपवीतं च धारयेद्विधिकल्पितम् ॥ 247

கிழக்கோடிக்காய்ப் பருமனுள்ளதான முப்பத்திரண்டு ருத்ராக்ஷமுள்ள மாலேயைக் கழுத்திலணியவேண்டும். நூற்றிஎட்டு மணிகள் (ஜபம் செய்யத்தகுதியுள்ள) கோர்க்கப்பட்ட மாலேயான ருத்ராக்ஷ மாலேயை ஜபத்தின் பொருட்டு வைத்துக்கொள்ள வேண்டும், அல்லது ஜபத்தின் பொருட்டு இருபத்தி ஏழு மணிகளேயுடைய மாலேயை ஜபத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டும். (நூற்றிஎட்டு மணிமாலேக்குப் பதிலாக) இருபத்திஏழு மணி கொண்ட மாலேயை நான்கு தடவை சுற்றிஞல் நூற்றிஎட்டு ஆகுமாதலாலும் நீளமான மாலே பூமியில் இடிபடாமலிருக்குமானதாலும் சௌகரியத்தின் பொருட்டே இருப்பத்தி ஏழு எண்கணக்கிட்டுக் கூறப்பட்டிருக்கிறது) இவ்வாறு வெண்மையாயும் முறைப்படி நிர்மாணம் செய்யப்பட்டதுமான யக்ஞோபவீதத்தை தரித்துக்கொள்ள வேண்டும்.

षट्सप्त पञ्चहस्तं वा बाणभागैक विस्तृतम् ।
सुश्लक्ष्णं सुदृढं सूक्ष्मं सितं रोमादि वर्जितम् ॥ 248

निरस्त चिबुकंचैवं कर्णाभ्यासे च वेष्टयेत् ।
पुच्छं वै वामकर्णे तु वेष्टयेत्त प्रदक्षिणम् ॥ 249

वेष्टयित्वेव मेकंतु शेषं शिरसि वेष्टयेत् ।
उष्णीष लक्षणं प्रोक्तं वस्त्रलक्षणमुच्यते ॥ 250

ஏழு அல்லது ஆறு அல்லது ஐந்து முழ நீளமுள்ளதாயும் ஐந்தில் ஒருபாகம் அகல முள்ளதாயும், கெட்டியாயும், மிருது வாயும், மெல்லியதாயும், வெண்மையாயும், உரோமம் முதலிய வைகளில்லாததாயுமுள்ள வஸ்திரத்திஞல் கன்னத்தில் படாம லிருக்கும்படி காதின் அருகில் கட்டவேண்டும். அவ்வாறு கட்டப்படும், உஷ்ணீஷம் என்ற சிரோவேஷ்டனமானது புச்ச முடையதாயும் அந்த புச்சம் இடது காதினருகிலுள்ளதாயுமிருக்க வேண்டும், சிரசைச் சுற்றி ஒரு சுற்றுச்சுற்றி மீதியை மஸ்தகத்தில் சுற்றவேண்டும். இவ்வாறு சுற்றுவதும் பிரதக்ஷிணமாகச் சுற்ற வேண்டும் இவ்வாறு உஷ்ணீஷத்தின் இலக்கணம் கூறப்பட்டது. இனி, ஆசாரியனுக்குரிய வஸ்திரத்தின் முறையானது கூறப் படுகிறது.

यजने स्थापने चाग्निकार्ये शैवोत्सवेपि च ।
उत्तमं दशहस्तं स्यान्मध्यमं नवहस्तकम् ॥ 251

अधमं चाष्टहस्तं स्यात् पञ्चतालसुविस्तृतम् ।
एवं वस्त्रद्वयं प्रोक्तमाचार्यो धारयेत्क्रमात् ॥ 252

யாகம், பிரதிஷ்டை, அக்னிகாரியம், மஹோத்ஸவம், முதலிய இந்தக்கிரியையின் ஆரம்பத்தில் ஆசாரியனுக்குக் கொடுக்கப் படும் வஸ்திரமானது உத்தம பக்ஷம் பத்து முழ முள்ளதாகவும் அதற்குச்சமமான உத்தரீயத்துடன் கூடியதாகவுமிருக்கவேண்டும் அல்லது, ஒன்பதுக்கொன்பதாகவோ, எட்டுக்கெட்டாகவோ இருக்கலாம். இவை இரண்டாம் பக்ஷம், மூன்ரும் பக்ஷமாக ஆகும் ஒவ்வொன்றும் இரண்டரை முழ அகல முள்ளதாக இருக்க வேண்டும். இவ்வாறு இரண்டு வஸ்திரங்களை ஆசாரியன் தரித்துக்கொள்ளவேண்டும்.

पीतं क्षौमं च रक्तं स्यादलाभेऽन्यत्प्रकल्पयेत् ।
अग्निदग्धं सकेशं च खंडितं मूषिकादिभिः ॥ 253

पुरातनं च जीर्णं च वस्त्रं पञ्चविवर्जयेत् ।

அக்னியால் கொளுத்தப்பட்டதும்; உரோம சம்பந்த முள்ளதும் எலி முதலியவைகளால் கடிக்கப்பட்டு துவார முடையதும், பழைய

வஸ்திரமும், வெகுகாலம் உபயோகப்படுத்தியதால் ஜீர்ண மாகவுள்ளதுமான இவ்வைந்து வகைவஸ்திரங்களும் விலக்கத் தக்கன இவ்வாறு விலக்காகவுள்ள வஸ்திரத்தைக்கட்டிக்கொண்டு யாகம் முதலியன செய்தால் தீங்கு உண்டாகும். அதாவது.

दग्धं तु राष्ट्रनाशंस्यान्मूषिकघ्नं भयप्रदम् ॥ 254

रोमं क्लेश विवृध्यै च धननाशाय जीर्णकम् ।
पुरातनं च वस्त्रं च यजमानं विनाशयेत् ॥ 255

तस्माद्दोषं परित्यज्य दापयेन्नव वस्त्रकम् ।
वस्त्रलक्षणमेवं स्यादुत्तरीयं ततः शृणु ॥ 256

அக்னியால் கொளுத்தப்பட்ட வஸ்திரம் தரித்துக்கொண்டு ஆசாரியம் செய்தால், ராஷ்ட்ர நாசமுண்டாகும், எலிகடித்தவஸ்திரம் பயத்தை உண்டு பண்ணும். உரோமத்துடன் சேர்த்து நெய்த வஸ்திரம், கிலேசத்தை உண்டு பண்ணும், ஜீர்ணமான வஸ்திரம் தனநாசத்தை உண்டுபண்ணும். பழமையான வஸ்திரம், இய மானனை நாசம் செய்யும். ஆதலால் தோஷத்தை உண்டுபண்ணும் இவைகளை நீக்கிப் புத்தாடை உடுத்திக்கொண்டு, யாகம் பிர திஷ்டை உத்ஸவம் முதலியவைகளில் ஆசாரியனாய் இருந்து பூஜை ஹோமம் முதலியன செய்யவேண்டும், இவ்வாறு வஸ்திர லக்ஷணம் கூறி உத்தரீயத்தின் இலக்கணம் கூறப்படுகிறது.

बाणहस्तायतं वाऽपि वेदहस्तायतं तु वा ।
तालमात्र सुविस्तारं बन्धयित्वाहिपुच्छकम् ॥ 257

यज्ञोपवीत वद्धार्यं उत्तरीयं विशेषतः ।
उत्तरीय विधिः प्रोक्ता योग पट्टीविधिंशृणु ॥ 258

ஐந்து முழநீளமுள்ளதாகவோ நான்குமுழம் நீளமுள்ளதாகவோ உள்ளதாயும். ஒருதாலம் அகலமுள்ளதுமான உத்த்ரீயத்தை இரண்டு பக்கமும் தொங்கும் வாலுடையதாகப் பூணூல் போல் தரித்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு போட்டுக்கொள்ளப்படும் உத்தரீயம் மிகவும் விசேஷமாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு உத்திரீயமுறைகூறி யோகபட்டிகையின் முறையானது சொல்லப் படுகிறது.

(தொடரும்)

இயற்கைக் காட்சியும் ※ ※ செயற்கைக் காட்சியும்

வித்துவான். திரு. சண்முக. குப்புசாமி

இவ்வுலகில் ஆண்டவனால் படைக்கப்பட்டவை அனைத்தும் இயற்கைப் பொருட்கள். ஏனையவை அனைத்தும் செயற்கைப் பொருட்கள். எவரும் தோற்றுவிப்பாரின்றி தன்னியல்பால் தோன்றியனவற்றை இயற்கை என்றும், அறிவின் துணைக் கொண்டு உயிர்க்குலம் முயன்று ஆக்கிப் பிறப்பித்த ஏனைய பொருட்கள் அனைத்தையும் செயற்கை என்றும் கூறுவது மரபு. ஆதலின் இவ்வுலகப் பொருட்கள் அனைத்தையும் இயற்கை - செயற்கை என்ற இரு பெரும் பிரிவுகளினுள்ளே அடக்கிக் காண முடியும்.

இயற்கை யாண்டும் பரவிய அருங்காட்சி. அது மண் - விண் - வளி - தீ - கடல் என்ற ஐம்பெரும் பூதங்களாய் விளங்குகின்றது. சுவை - ஒளி - ஊறு - ஓசை - நாற்றம் என்ற ஐம் பெரும்புலன்களிலும் இயங்குகின்றது. குறிஞ்சி - முல்லை - மருதம் - பாலை நெய்தல் என்ற ஐம்பெரும் நிலங்களிலும் பரவிக்கிடக்கின்றது.

இவ்வழகிய இயற்கை மணி நிலவாய், மாந்தளிர் தழுவிய தென்றலாய் இன்பம் தருகின்றது. சுடர்க்கதிராய் - சூல்கொண்ட மேகமாய் அழகு செய்கின்றது. மழையாய் நின்று மண்ணைக் குளிர்விக்கும் வண்மையோடு வாழ்கின்றது. கடலாய் நிலவிக் கருத்தினைக் கவரும் காட்சியாய் அமைகின்றது. வானமளந்த மலையாய் நின்று மலைப்பினைத் தருகின்றது. வளம் தரும் மரம் - செடி - கொடிகளாய் இலங்கி, வாழ்வொடு பின்னிப் பிணைந்து வாழவைக்கின்றது. சுருங்கச்சொன்னால் காட்டுமலராய் - கலாபம் விரித்தாடும் மயிலாய் - கருவண்ணக் குயிலாய் - பொழிலாய் - பூஞ்சோலையாய் - பொன்னாய் - முத்தாய் - பெண்ணாய் அழகு செய்கின்றது.

இவ்வாறு விளங்கும் இயற்கையின் எழிற்காட்சியே கடவுட் காட்சி எனக் கண்டனர் நமது முன்னோர். அக் காட்சியின் விளைவால் இயற்கையின் இணையற்ற பொருட்களைத் தொழுது

வணங்கும் மரபினை எய்தினர் நமது பெரியோர். ஈடிணையற்ற ஆற்றலினைக் கொண்டு விளங்கிய அப்பொருட்கள் கடவுளாய் - கவிதையாய் - கருத்தாய் - இலக்கியமாய் நின்று எண்ணிறந்த புலவர்களைக் கவிதையாக்கச் செய்திருக்கின்றது. கணக்கற்ற கவிஞர்கட்குக் கவிதை ஊற்றுப் பெருகி நிற்கக் காரணமாயிருந் திருக்கிறது.

இடைக்காலப்புலவரும் சைவசமய குரவருமான நாவுக்கரசர் இறைவனது இணையற்ற பாதங்களை இயற்கையோடொப்பிட்டுக் காட்டி மகிழ்ந்திருப்பதை நாம் தேவாரப்பாடலொன்றால் அறிய லாம். அவர் தமது கருத்துக்கினிய கடவுளின் பாதங்களை,

“ மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே ”

என்று பாடினார். ஆண்டவன் பாதங்கள் வீணையின் ஒலியாய், மாலைக்கால மதியாய், வீசும் இளங்காற்றாய், வீங்கிள வேனிலாய், வண்டறை பொய்கையாய், சுருங்கச் சொன்னால் “ இயற்கை யாய் ” நாவுக்கரசருக்கு நல்லழகு காட்டி அருள்செய்திருப்பதை நாம் காணலாம். அக்காட்சியே கடவுட்காட்சி. அதுவே இயற் கைக் காட்சி.

காலம் செல்லச் செல்ல மனிதமனம் இயற்கையினைக் கூர்ந்து நோக்கத் துவங்கியது. அதனுள் மறைந்து கிடக்கும் மாபெரும் ஆற்றல்களை வெளிக்கொணர முயன்றது. முதலில் கனவாய் - கற்பனையாய் - எழிலாய் - இன்பமாய் - இலக்கியமாய் - இறைவ னாய் விளங்கிய இயற்கை, காலவட்டத்தில் அறிவாய் - ஆராய்ச்சி யாய் - ஆக்கப் பொருளாய் - வாழ்வின் அடிப்படைத் தேவை யாய் நின்று பயன்தரத் துவங்க முற்பட்டது.

தூய்மையான மனத்திலும், துறவுள்ளத்திலும், கவிஞன் இதயத்திலும் களிநடம் புரிந்து, அவ்வுள்ளங்களில் நிரந்தரமான இடத்தினை எய்தி வாழும் இயற்கை, அறிவாராய்ச்சிகளின் ஊடுருவலாய் மனித வாழ்வின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் ஆக்கப் பொருளாய் இன்று மிளிர்ந்து நிற்கின்றது. இக் காட்சியினை நாம் அறிவுக் காட்சி எனலாம். அதுவே செயற்கைக் காட்சி.

சராசரி மனிதனைவிட மேலான அறிவு வளம் படைத்த மனிதன் தான் பெற்ற அறிவின் முதிர்ச்சியினைக் கொண்டு இயற்கையின் சில கூறுகளைப் பாகுபடுத்தி உணர்ந்து வெளியிடுவதே இன்றைய விஞ்ஞானம் என்னும் அறிவியற்கலை. அறிவியற்கலை இயற்கையின் பயன்; சுருங்கச்சொன்னால் செயற்கை.

அச்செயற்கை இன்று இயற்கையுடன் போட்டியிடுவதை நாம் காண்கிறோம். இயற்கை இயற்கையாய் நின்று இன்பம் தருவதுடன் செயற்கையாயும் நின்று பயன்படுவதை நாம் அறிகின்றோம். மலர் மலராக இருந்து மாண்பயன் தருவதுடன். மலரினின்றும் பிழிந்தெடுக்கப்பட்ட மணச்சாறுயும்நின்று உயிர்க்குலத்துக்கு இன்பம் தருவதுபோல் இயற்கையும் நின்று விளங்குகின்றது. இறைவன் இவ்வாறு தனது தண்ணளியை இருவேறு முறைகளில் உயிர்க்குலத்தை நோக்கி ஆற்றுப்படுத்துகின்றான்.

ஆதலின் இயற்கையை ஒளி என்றால் செயற்கையை நிழல் எனலாம். இயற்கையைச் செடி என்றால் செயற்கையை மலர் எனலாம். இயற்கையை இதயம் என்றால் செயற்கையை எண்ணம் எனலாம். இவை அனைத்தும் ஒன்றினை ஒன்று தழுவியவை; தழுவி வாழவே முற்படுபவை.

'ஆடி', பார்ப்பவரின் உருவத்தைத் வெளிப்படுத்தும் இயற்கைப் பொருள். அதனுள் கதிரவன் ஒளியினைச் செலுத்தும்போது பிறக்கும் 'படி நிழல்' செயற்கை. ஆகலின் இயற்கையை மண் என்றால், செயற்கையை அதனின்றும் புறப்பட்ட மரம் எனலாம்.

செயற்கை அழியும் தன்மையுடையது. உண்மைத் தன்மையில்லாதது. காலம் உள்ள அளவும் வாழும் சாகாத்தன்மை பெறாதது. பொலிவும் பொற்பும் வளரும் நிலையிலேயே நின்று விளங்கத்தக்கதாய் அமைந்திருப்பது. ஆனால் இயற்கை இதனின் வேறுபாடுடையது.

ஆதலால்தான் மனிதனது அறிவு விரிவு எய்த எய்த இயற்கையும் தனது அறிவில் விரிந்து நின்று தனது ஆற்றலினைப் புலப்படுத்துகின்றது. தனது சேயான செயற்கைக்குத் தாயாய் நின்று அரவணைக்கும் ஆற்றலைப் பெற்று இன்றும் விளங்குகின்றது; என்றும் விளங்கும் என்பது உண்மை.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின்

கேதாரநாதம்-பதரிநாதத் தலயாத்திரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

(மலர் 22, இதழ் 12, பக்கம் 670 இன் தொடர்ச்சி)

2, 3—10—1963 இந்த இரு நாட்கள் திருக்கேதாரநாதர் வழிபாடுகள் நடைபெற்றன. திருக்கேதாரச்சிகரம் புதுப்பனி மூடப்பெற்று வெண்ணீறு சண்ணித்த மேனியன் போல ஒளிர்ந்தது. அங்குத்தங்கிய இரண்டு நாட்களிலும் முன் யாத்திரைகளில் இருந்த குளிரைவிடக் குறைவாகவும், பனி, மழை இவைபோன்ற இடர் இல்லாமலும் சூரியன் பிரகாசித்திருந்தது. சூரிய ஒளி இருந்தது; வெப்பம் இல்லை. முதல்நாள் பூரணை. அன்று பூரண சந்திரன் ஒளியில் தரிசனம். பௌர்ணமியன்று கேதார தரிசனம் மிகவும் சிறப்பு உடையது. திருக்கோவிலில் இந்தத்தடவையில் கூட்டமே இல்லை. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானவர்களும் உடன் வந்தவர்களும்தான். பண்டாக்களும், பூஜகர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியைக்கண்டதும் சிறப்பான வந்தனைகள் செலுத்தி வழிபாட்டுக்கு உதவி செய்தார்கள். கன்னடிய ஜங்கமர்கள் (லிங்காயத்து) அங்குப் பூஜகர்கள். தலைமைப் பூஜகர் ராவல்ஜி என்று அழைக்கப்படுகிறார். மரியாதை பெறத்தக்கவர்களுக்குத்தான் அவர் நேரில் இருந்து பிரசாதங்கள் வழங்குவது வழக்கம். அவ்விதமே எல்லாம் நடைபெற்றன. கேதாரநாதரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு ஏகாந்த தரிசனம் அளித்தார். ருத்ராபிஷேகமும், அடியவர்களுக்கும் பண்டாக்களுக்கும் அன்னம்பாலிப்பும் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. மூன்று முறைகள் இங்கு தரிசனத்திற்கு எழுந்தருளி வந்ததில் இது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. எல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்குச் செய்துவைக்கப்பட்ட தனி ஏற்பாடுகளாகவே இருந்தன. வெளியார் இடையீடு எதுவும் இல்லை.

கடைக்காரர்கள் முதலிய பலரும் அவரவர் ஊர்களுக்குத் திரும்பிவிட்டனர். குதிரைக்காரர்கள் தங்கள் தங்கள் குதிரைகளை இங்கு இம்மலைப்பகுதியில் மேய்ச்சலுக்கு விட்டுவைத்துத் திரும்பவந்து ஓட்டிப்போனார்கள். குதிரைகள் நல்ல புல்லும் தண்ணீரும் அருந்தி கொழுத்துப் பருத்திருந்தன. அவர்கள்

மொழியில் மஸ்து ஏறியிருந்தன. கேதாரம் வருவதற்குக் கீழிடங் களில் குதிரைகள் கிடைக்கவில்லை. திரும்பும்பொழுது ஏராளமாக நல்ல குதிரைகள் கிடைப்பதாய் இருந்தன. ஆனால் உட்காரும் ஆசனம், கடிவாளம் முதலியன இல்லை. குதிரைகளும் கட்டுக் கடங்காதனவாய் இருந்தன.

வழியெல்லாம் நெல் அறுவடை நடைபெற்றது. நெல்லையும் வைக்கோலையும் சேகரிப்பதில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டிருந் தனர். அறுவடையானதும் பனிக்காலத்தில் கோதுமை பயிரிட உழவும் செய்து வந்தார்கள். இந்தக்காலங்களில் இங்குக் கூலி வேலைக்கு ஆள் கிடைப்பது அருமையாக இருக்கும். வெளியூர் களிலிருந்து வந்திருக்கும் நேப்பாளிகள்தான் கிடைப்பர். வாட கைக்குக் குதிரைகள், தண்டி முதலியன கிடைப்பதும் அருமை. வழிகளில் கடைகளும் அதிகமில்லை. தட்ப வெட்பங்கள் நமது நாட்டு மக்களுக்கு மிகவும் ஒத்ததாக இருந்தன. யாத்திரை வாசிகள் குறைவாக இருந்தாலும் கூட்டத்தில் போகாது தனித்து வழிபடவும், இமாசலப் பகுதியின் அழகு முழுவதை யும் காண விரும்பியும் பொருள்வசதிமிக்க பெரிய மனிதர்கள் வந்து வழிபடும்காலம் இது. மலை வழிகளில் இப்பகுதியில் தங்குமிடங்கள் தடையின்றிக் கிடைக்கும்.

இவைபோன்ற வசதிகளோடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தில் திருக்கேதார வழிபாடுகள் முடித்துக்கொண்டு பதரிநாத தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

3—10—63 பிற்பகல் கேதாரத்தைவிட்டுத் திரும்பலானோம். ராம்பூரில் இரவைக் கழித்து மறுநாள் அதிகாலையில் அங் கிருந்து புறப்பட்டு பகல் 12 மணி அளவில் குப்தகாசியை வந்து அடைந்தோம். அன்று பாரணை நாள்; ஸ்ரீ விசுவேசுவரர் வழி பாடுகளும் பாராயணங்களும் நடைபெற்றன. வடை பாயசங்கள் முதலியன செய்து பெருமானுக்கு நிவேதித்து பெரிய விருந் துண்டோம். எங்களோடு வந்த அன்பர்கள் பலரும் சமையலில் மகிழ்ச்சியோடு ஈடுபட்டு வேலை செய்ததில் மிகவும் அருமையாக அமைந்திருந்தது அந்த விருந்துச் சமையல். இதுபோன்ற பெரிய யாத்திரைகளில் உடன் வருவோருக்கு, உயிருக்கும், நாக்கிற்கும் சுவையூட்டி அகத்திலும் புறத்திலும் பிறர் மகிழ் வதைக் கண்டு திருவுளம் களிக்கும் பாங்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு இயல்பாக அமைந்தது. அந்தத் திருக்கை வழக்கமாக இன்று எல்லோருக்கும் கிடைத்தது இந்த நல்விருந்து. மறுநாள் அதிகாலையில் புறப்பட்டு அவ்வழியில்

உந்தூர்தி நிற்கும் இடத்திற்குக் குதிரையில் வந்து அங்கிருந்து உந்தூர்திமூலம் ருத்ரப்பிரயாகைக்குக் காலை 10 மணிக்கு வந்து சேர்ந்தோம்.

பதரிதேவஸ்தானத் தங்கும்விடுதியில் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு பதரிக்குத் தனி உந்தூர்தி ஏற்பாடு செய்துகொண்டு புறப்பட்டோம். பகல் 12 மணிக்குள் கேட் (Gate)டில் எங்கள் உந்தூர்தியும் புறப்பட்டது. அன்றிரவு பீப்பல்கோட்டியில் தங்குவது என்பது திட்டம்.

குறிப்பிட்டநேரத்தில் புறப்பட்டது ஊர்தி. 4 கல் தொலைவு கடந்ததும்வழியையடைத்துக்கொண்டு வேறொருஉந்தூர்திகிடந்ததைக் கண்டோம். பழுதுபட்ட அந்த வண்டியை அந்த இடத்திலேயே விட்டு விட்டு அதில் வந்தவர்கள் போயிருந்தனர். அது ஒரு ஏற்றப்பகுதி. வழி வளைந்து வளைந்து மேட்டில் ஏறும்பகுதி. அந்த வண்டியை மாறிப்போக பக்கத்தில் வழியும் சரியில்லை. ஒரு பகுதியில் பெரியதும் சிறியதுமானக் கூழாங் கற்குவியல்கள் இருந்தன. அவ்வழியாகத்தான் நாங்கள் வந்த வண்டி மாறிப்போக வேண்டியிருந்தது. எங்களுக்கு முன்னே ஒரு சரக்கேற்றும் ஊர்தி போயிற்று. அதற்கு உடனிருந்து உதவிசெய்து அதை வழிகடத்தி விட்டோம். அது சென்றதும் எங்கள் வண்டியையும் அதுபோலவே செலுத்த முயன்றோம். ஆனால் எங்கள் வண்டி அந்தக் கூழாங்கற் பகுதியில் சென்றதும் சக்கரம் சுழலச் சுழல கற்களை வாரியிரைத்துக்கொண்டு கீழே இறங்கிவிட்டது. வண்டி தன்னியக்கத்தால் அதை நகர்த்த முடியவில்லை. வேறு வழியில்லாமல் எங்களில் பலரும் வண்டி ஓட்டி முதலியவர்களும் அங்கு உள்ள கற்களை அப்புறப்படுத்திய பிறகுதான் வண்டியை நகர்த்த முடிந்தது. குறிப்பிட்ட பாரம் இல்லாததால் அந்தப் பகுதியில் வண்டியினால் இழுக்க முடியவில்லை. அப்பொழுது வெயிலும் நன்றாகக் காய்ந்தது. குடிக்கத் தண்ணீரும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் வண்டியை எடுத்துக்கொண்டு அடுத்த சிவனன்டியை அடைந்தோம். அங்குள்ள நீரோடையில் தண்ணீர் அருந்தி மேலே சென்றோம். ஆனால் கோசார் என்ற ஊரை அடையும்பொழுது மணி4 - 5 ஆகிவிட்டது. கடைசிவழித் (Gate) திறப்பு மாலை 4 மணியோடு முடிந்து விடுகிறது. இது போன்ற வழிப்போக்கர்கள் வண்டி மேலே செல்ல முடியாது. ஐந்து நிமிடங்களே ஆகியிருந்த போதிலும் காவற் படையினர் அனுமதி மறுத்துவிட்டனர். ஆனால் அரசாங்கவண்டிகள் படைப்பிரிவு வண்டிகள் எந்த நேரத்திலும் செல்ல அனுமதிக்கப்பட்டன.

மூன்று வருடங்களுக்குமுன் இந்தக் கட்டுத்திட்டங்கள் தளர்த்தப்பட்டிருந்தன. அவ்வண்டிகள் பல வண்டிகள் மாறுவதில் வழிபெயர்ந்து சரிந்து ஆற்றில் விழுந்து பெருஞ்சேதம் ஏற்பட்டது. மனித உயிர் நஷ்டமும் அதிகம். அந்த அனுபவத்தை ஒட்டி இந்த ஏற்பாடு. மலை வழிகள் ஒரு வழிப் பாட்டை அமைப்புக் கொண்டவை. அதில் இரு வழிகளிலும் தொகுப்புத் தொகுப்பாக (convoy) வண்டிகளை விடுவார்கள். மாறவேண்டிய குறிப்பிட்ட இடத்தில் இரு வழி வண்டிகளும் வந்து சேர்ந்ததும் மாறிப்போக அனுமதிப்பார்கள். அதற்கு இரு தொகுதிகளுக்கும் அடையாளக் கொடிகள் கொடுத்திருப்பர். ஒரு தொகுப்பில் முதல் வண்டிக்குச் சிகப்புக் கொடியும் கடைசி வண்டிக்குப் பச்சைக் கொடியும் கொடுத்திருப்பர். இரு வழிகளிலும்பச்சைக்கொடி வண்டிகள் வந்ததும் வழி திறக்கப் படும். இந்த ஏற்பாடு இப்பொழுது மாறிவிட்டது. கொடி அடையாளம் இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வழிமாற வேண்டிய அந்தந்த குறிப்பிட்ட இடங்களிலும் வந்து சேரும் வண்டிகளை மட்டுமே அனுமதிப்பது என்ற கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அவ்விதம் வந்துசேரும் வண்டியில் முதல் கடை என்று அவ்வப்பொழுது கொடிகள் போட்டுக்கொள்ள வேண்டியதுதான். முதலில் புறப்பட்டவைகளில் சில வராவிட்டாலும் அவற்றிற்காகக் காத்திருப்பதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு தொகுப்பில் வரவேண்டியவை வராவிட்டால் அடுத்தபடியாக எந்த நேரத்தில் வழி திறப்பதாக ஏற்பாடோ அதுவரை காத்திருக்கவேண்டியதுதான். இந்த நிலையில் எங்கள் வண்டியும் அடுத்த நாள் காலைவரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

சாலையை ஒட்டி இந்த ஊரில் காலாகம்பளிவாலா சத்திரம் இருக்கிறது. ஆனால் இக்கட்டிடத்தை ராணுவத்தினர் வாடகைக்கு எடுத்துக்கொண்டு விட்டார்கள். சீனப் படையெடுப்பு நேர்ந்த பிறகு, மானக்கணவாய் (Mana pass) நிதிக்கணவாய் (Niti pass) இரு வழிகளிலும் நமது ராணுவத்தினர் வந்து தங்கியிருக்கிறார்கள். இவ்வழிகளில் உள்ள காலாகம்பளிவாலா சத்திரங்கள், தேவஸ்தானக் கட்டிடங்கள் முதலிய பொது இடங்களை எல்லாம் வாடகைக்கு எடுத்து விட்டார்கள், யாத்திரிகர்கள் தங்க எளிதில் இடம் கிடைக்கவில்லை.

அவ்வூர் பஞ்சாயத்து கமிட்டிக் கட்டிடம் ஒன்று இருக்கிறது. அதைப்பூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் வெளித்தாழ்வாரம் ஒன்று இருந்தது. அதில் படுக்கைகளை எடுத்துப் போட்டுக் கொண்டு மற்றவைகளை ஊர்தியிலேயே விட்டு வைத்துக்கொண்

டோம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமும் சிலரும் இக்கட்டிடத்தில் தங்குவது; பிறர் எல்லாம் ஊர்தியிலே தங்கிவிடுவதென்று ஏற்பாடு செய்துகொண்டோம். இந்த நிலையில் நமது குருமூர்த்திகள் தங்குவது உடன் வந்த எல்லோருக்கும் மனத்துன்பத்தை அளித்தது. ஆனால் அங்கிருந்த நிலையில் இதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் இதைப் பொருட்படுத்தியதாகத்தெரியவில்லை. மடாலயத்தில் எவ்விதமாக இருப்பார்களோ அவ்விதமே இருந்தார்கள்.

உடன்வந்த கேதார பண்டார கணேசசங்கர் வாஜபேயருக்கு மனம் பொறுக்கவில்லை. கண்ணீர் துளித்தது. பல இடங்களுக்கும் அலைந்துகொண்டே இருந்தார். அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவரைக் கண்டு பேசிச் சாவி வாங்கி வந்து கட்டிடத்தைத் திறந்து உள்ளே தங்கவைக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்காக அங்கிருந்து ஒருமலை ஏற்றத்தில் 4, 5 கல் தொலைவில் உள்ள ஊருக்குச் சென்றார். வயல் வெளிக்கு வெளியில் சென்றிருந்த அத்தலைவர் வரும்வரை காத்திருந்து அனுமதி பெற்றுவந்தார். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் தங்க ஒரு இடம் கிடைத்தது. பண்டார பிறகுதான் ஸ்நானம் செய்து வைதிக காரியங்களைச் செய்து ரொட்டி செய்து பிறகு ஓய்வுகொண்டார். அவர் அந்த நாட்டு வாசியாக இருந்தபடியால்தான் இந்த உதவி கிடைத்தது.

கோசரண் என்பதன் மரூஉ கோச்சர். ராணி அகல்யா பாய் இவ்வழியே பத்ரிக்குச் சென்றபோது இப்பகுதியை - இந்த ஊரைப் பசுமேய்ச்சல் தரையாகத் தானம் வழங்கினாள். மாடுகள் வந்து தங்கி மேய்வதற்கு வசதியான இடம். இரண்டு மலைகளுக்கு இடையே அலகநந்தா கரையில் அமைந்த பெரிய புல் அடர்ந்த சமதரைப் பிரதேசம். ஆகையால் இந்த இடத்தைக் கோசரணாலயமாக ஆக்கி வைத்தாள் அந்த அரசி.

சமீப காலம் வரை இங்கு ஒரே ஒரு தனிக்கட்டிடம் காலிகம்பளிவாலா சத்திரம் மட்டுமே இருந்தது. நமக்குச் சுதந்தரம் வந்த பிறகு இந்த மலை நாட்டிலும் அபிவிருத்திகள் பல செய்யப்பட்டு இருக்கின்றன. இந்தக் குறுகிய காலத்தில் உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, பல அரசாங்க அபிவிருத்தி நிலையங்கள், பஞ்சாயத்து சமிதி. பெரிய கடைத்தெரு முதலியன அமைக்கப்பட்டு இருக்கின்றன. சுற்றுப்புறங்களில் உள்ள சிற்றூர்களில் இருந்து பல மக்களும் வந்து பயன்பெறும் நடு இடமாக இது இப்பொழுது விளங்குகிறது. குழாய் மூலம் தண்ணீர் ஒரு சில இடங்களில் வழங்கப்படுகிறது.

ஊருக்கு அருகில் ஒரு ஆறு ஓடுகிறது. ஆனால் ஒரு பெரிய இறக்கம் வழியாகத்தான் அதற்குச் செல்லவேண்டும். இறங்கு வதும், ஏறுவதும் துன்பமாக இருக்கும். அந்த மலைநாட்டு மக்கள் அதிலிருந்து மாவு அரைக்கும் இயந்திரங்கள் அமைத்துப் பயன் படுத்தி வருகிறார்கள்.

மறுநாள் அதிகாலையில் காப்பியும், பலகாரமும் செய்து உட் கொண்டு முதல் வழிதிறப்பில் (gate) 7 மணிக்கு எங்கள் உந் தூர்தி விட்டுப் புறப்பட்டது. கர்ணப்பிரயாகை, நந்தப்பிரயாகை, சமோலி, பீபல்கோட்டி வழியாக அன்று மாலை 2 மணி அளவில் ஜோதி மடம் சென்று அடைந்தோம். அங்குள்ள ஜோதி மடத் தின் அருகே பதரி தேவஸ்தானக் கமிட்டியார் அமைத்துள்ள கட்டிடத்தின் மேல் மாடியில் தங்கினோம்.

ஜோதி மடம் பெரிய ஊர். நமது இந்திய இராணுவமும் அங்கு அதிகமாக வைக்கப்பட்டுள்ளது. ஒரு மலைச்சரிவில் அமைந்தது. நல்ல அமைப்புக்கொண்ட சாலைகள் சில உள்ளன. பெரிய கடைத்தெரு, கூலி நிலையங்கள் பலவும் அங்கு உண்டு. கூலிகள், குதிரைகள் அங்குக் கிடைக்கும். இதுவரை உந்தூர்தியில் வரலாம். இதற்குமேலே சுமார் 20 மைல் கால் நடையாகப் பதரிக்குச் செல்லுதல் வேண்டும். யாத்திரைக் காலங் களில் குதிரைகள், கச்சார், கோவேறு கழுதை, கழுதை, தண்டி, கண்டி முதலிய வாகன வசதிகள் கிடைக்கும். மூட்டை தூக்கும் நேபாள கூலிகளும் கிடைப்பார்கள். இவைகளை அமைத்துக் கொடுக்க கூலி நிலையங்களும் இருக்கின்றன. மின்சார விளக்கு உள்ள தெருக்களும் உண்டு.

இங்கிருந்து நிதிக்கணவாயைக் கடந்து கயிலைக்குத் தவள கங்கை வழியே செல்லலாம். 15 நாள் வழிப்பயணம். இவ் ஊரில் ஆதிசங்கரர் அமைத்த திருமடம் ஒன்று இருக்கிறது. அதை ஒட்டி இவ்வூர் ஜோதிமடம் என்று பெயர் பெற்றது. காலக்கிரமத்தில் ஜோஷி மடம் என்று வழங்கப்படுகிறது. ஆதி சங்கரர் வழிபட்டதாகச் சொல்லப்படும் சாலக்கிராமத் திருவுரு வங்கள் இன்றும் வழிபாட்டில் இருக்கின்றன.

அன்று மாலையே கிடைத்த ஒரு சில குதிரைகளை ஏற்பாடு செய்துகொண்டோம். அன்று மாலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தில் திருமஞ்சனம் ஆகி, மடத்தில் உள்ளமூர்த்திகளைத் தரிசித்துவந்தார்கள். மறுநாட் காலையில் உணவு உட்கொண்டு பதரிக்குப் புறப்பட்டோம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத் திற்கும் இன்னும் சிலருக்கும் ஏறுகுதிரைகள் ஏற்பாடு செய்யப்பட் டன. மற்றவர்கள் கால்நடையாகச் செல்வது என்பது திட்டம்.

(தொடரும்)

ஒரு விளக்கம் :

ஒருவாசகம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,

வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

மக்களுள் ஒருவர் கருத்தை மற்றையோர் கூடிய அளவில் தெளிவாக அறிந்து கொள்வதற்குச் சொற்களே சிறந்த கருவியாய் அமைந்துள்ளன. சொற்களை விடுத்து வேறு எதனையும் அதற்கு அத்துணைச் சிறந்த கருவியாகக் கொள்ளுதல் இயலாததாகின்றது.

இனிச் சொற்கள் கருத்துக்களை யுணர்த்துவதும் தொடர் மொழியாக அமையும்பொழுதேயாகும். அதனால், 'சொல்' என்னும் பொருளைத் தருவதாகிய, 'வாசகம்' என்னும் வடசொல், தமிழில், சிறப்புப் பற்றித் தொடர்மொழியையே குறித்தல் வழக்கமாய் உள்ளது.

தொடர் மொழியாகிய வாசகத்தின் நடை, பேச்சு வழக்கும் செய்யுள் வழக்கும் என இருவகையாயே திருந்திய மொழிகள் பலவற்றிலும் அமைந்துள்ளது. அவ்விருவகை நடையுள், ஒரு கருத்தை ஒருவர் செய்யுள் நடையில் சொல்வாராயின், அக் கருத்தை அவர் வாசகத்தாலே ஓர் எழுத்தும் மாறுதல் இன்றி ஏனையோர் பலரும் மறவாமற் சொல்லி மனத்திற் பதித்துக்கொள்ளலாம். சொல்லியவரது காலத்திற்குப் பின்னும் பலகாலத்திற்கு அக் கருத்து உலகத்தில் நிலைத்து நிற்கும். இன்னும் அவ்வாசகம் வரிவடிவில் எழுதப்பட்டுவிட்டால் சிதைவு சிறிதும் இன்றி நன்கு நிலைபெறுவதாகும். அங்ஙனம் பல கருத்துக்களைப் பலர் செய்யுள் வடிவில் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அவர்தம் வாசகங்கள், அப்படியே சொல் வடிவத்தில் சொல்லப்பட்டும், எழுத்து வடிவத்தில் எழுதப்பட்டும் உலகில் நிலவிவருகின்றன. அத்தன்மையவான வாசகங்களுள் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைத் தெரிவிக்கும் வாசகங்களும் உள. அவைகளை நோக்குமிடத்து, 'எவை உண்மை? எவை உண்மையல்ல?' என்ற ஐயப்பாடு மக்களுக்கு உண்டாகின்றது. அவ்வையப்பாட்டினை நீக்குதற்கு,

'உண்மை வாசகங்கள் இவை' என்பதை வரையறுத்துச் சொல்வது, வரலாற்று முறையின் வந்த ஆன்றோர்க்கு இன்றியமையாக் கடனாகின்றது. அதனால், அத்தகைய ஆன்றோராகிய ஔவையார், 'நல்வழி' என்னும் தமது நூலில் வரையறுத்து அருளிச்செய்துள்ளார். அச் செய்யுளாவது,

" தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர் "

என்பது.

இவ் வெண்பாவினுள் ஔவையார் திருக்குறளையே திருநான்மறை முடிவுக்கும் முன்னே வைத்துக் கூறினார். அந்நூலை அருளிச்செய்த திருவள்ளுவநாயனாரையும், அவரது தெய்வப்புலமை கருதி, 'தேவர்' என்னும் பெயராலே குறித்தருளினார், அதனால், பின்வரும் திருநான்மறை முடிவையும், திருக்குறளின் பொருளாகக் கொள்ளவேண்டுமேயல்லது, வேறுவகையாகக் கொள்ளலாகாது என்பது விளங்கும்.

'தெய்வத் தன்மை பொருந்திய நூல்களுள் திருக்குறளும் ஒன்றே' என்று தெளிவாக உணர்தல் வேண்டும் என்பதனை,

" அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை — மறந்தேயும்
வள்ளுவன் என்பான்ஓர் பேதை அவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடையார் "

என்று, பழந்தமிழ்ப் பெரும்புலவராகிய 'மாமூலனார்' என்பவர் கூறிப்போந்தார். ஆகவே, பிரமாண நூல்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது திருக்குறள் என அறிகின்றோம்.

" வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தஉரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம் "

என்னும் வெண்பாவிலும், வள்ளுவர் நூலாகிய திருக்குறளே முதற்கண் வைக்கப்பட்டமை அறியத்தக்கது.

அடுத்து, 'திருநான்மறை முடிவு' என்றது உபநிடதங்களை. மூவராவார், 'சம்பந்தர், அப்பர், சுந்தரர்' என்னும் மூவர் முதலிகள். 'அவர்கள் அருளிச்செய்த தமிழ், தேவாரம்' என்பது உலகம் அறியும்.

'முனிமொழியும்' என்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் முதலியோர் கொண்ட பொருள், 'வியாச முனிவரது பிரம சூத்திரமும்' என்பது. அது திருநான்மறை முடிவை விளக்கும் ஆராய்ச்சி நூலேயன்றி வேறன்று ஆதலாலும், திரு நான்மறை முடிவு தவிர ஏனைய எல்லாம் இவ்வெண்பாவில் தமிழ் நூல்களே சொல்லப்படுவதாலும், திருநான்மறை தவிர மற்றைய நூல்களெல்லாம் ஆசிரியரது சிறப்புடன் கூறப்படுவ தாலும் திருக்கோவையார்க்கும் திருவாசகத்திற்கும் ஆசிரியராகிய ஆளுடைய அடிகளையே ஔவையார், 'முனி' என்று குறிப் பிட்டு, அவர் மொழிந்த கோவை திருவாசகமும் எனக் கூறினார் என்றே பொருள் கொள்வர். அவ்வாறு கொள்வதே மற்றும் பல காரணத்தால் பொருந்துவதாகின்றது. அக் காரணங்களை விரிப்பிற் பெருகும். திரு. கா. சு. பிள்ளையவர்கள், திருநான் மறையும் தமிழே என்றார்.

திருமூலர் சொல்லாவது 'திருமந்திரம்' என்பது வெளிப் படை, 'இவை அனைத்தும் வேறு வேறு வடிவில் இருப்பினும் ஒருவாசகமாகவே கொள்ளத் தக்கன' என்பதையே ஔவையார் உறுதிப்பட அருளிப்போந்தார். ஒருவாசகமாவது, 'பொன், கனகம், சொன்னம்' என்றாற்போல்வன சொல்லால் வேறு வேறாய் இருப்பினும், பொருளால் ஒன்றேயாதலாம்.

ஆகவே, தேவர் குறள் முதலாக இங்குக் குறிக்கப்பட்ட நூல் கள் யாவும் சொல்லால் வேறுவேறாய் இருப்பினும், பொருளால் ஒன்றேயாம். ஆகவே அவை அனைத்தும் ஒருவாசகமேயாகும்.

இனி, 'ஒருவாசகம்' என்பதற்கு, நயமான மற்றொரு பொருளும் உண்டு. அது, 'சகம் ஒருவா' என்பது. அஃதா வது, 'உலகத்தார் (உயர்ந்தோர்) மேற்கூறிய நூல்களுள் ஒன்றையும் நீக்கமாட்டார்கள், என்பது. எனவே, தேவர் குறள் முதலிய சீரிய நூல்கள் பலவற்றையும் ஒப்பக் கற்று உலகம் உய்வதாக.

திறன் ஆய்வு :-

தருமையாதீன வெளியீடுகள்

திருநெறிச்செம்மல்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 22, இதழ் 9, பக்கம் 464 இன் தொடர்ச்சி)

எண். 75, 76, 77, 78 தேவாரத் திருப்பதிகங்கள்

[திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, திருநாரையூர்]

வெளியிட்டோர் :- 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் அருளாணைப்படி வெளியிடப் பெற்றவை.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் மாதஜன்ம நக்ஷத்திரத் திருநாட்களில் பாடல் பெற்ற சிவதலங்கள் தோறும் சென்று அபிஷேக ஆராதனை செய்வித்து அத்தலத் திருப்பதிகங்களைத் தனித்தனியே அச்சிட்டு ஓதச்செய்து வழங்கியருளும் நியமப்படி இத்தலத் திருப்பதிகங்கள் வெளியிடப்பெற்றன. 1945

திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை மூன்று தலங்களும் சிதம்பரத்திற்குக் கிழக்கே மூன்றுமைல் அளவில் உள்ள தலங்கள். திருநாரையூர் மேற்கே ஐந்துமைல் அளவில் உள்ளது.

திருவேட்களத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன.

இத் திருப்பதிகங்களில் சம்பந்தர் பதிகம் வேட்கள நன்னகராரே என்று முடிகின்றது. இதில் இறைவனது இயல்புகள் பலவும் விரித்துரைக்கப்படுகிறது.

திருநாவுக்கரசர் திருப்பதிகம்,

" நன்றுநாள் தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம் "

என்று தொடங்கி, " பூக்கள் கொண்டு அவன் பொன்னடி, போற்றினல் காப்பன் " என்றும், " வேட்களம் தொழுதால் இடரில்லை " என்றும் கூறி வேட்களம் செல்லும் விழைவை நமக்கு உண்டாக்குகிறது.

திருநெல்வாயிலுக்குச் சம்பந்தர்பதிகம் ஒன்றுமட்டும் உளது. இதன்கண் " நெல்வாயில் இறைவன் எமது உச்சியார் " என்று முடிகின்றது.

" ஆதியார் அந்தமாயினர் வினை சோதியார் " என்றும், " நிச்சல் ஏத்தும் நெல்வாயிலார் தொழ இச்சையால் உறைவார் " என்றும் இறைவனது பொது சிறப்பியல்புகள் இப் பதிகத்துள் கூறப்படுகின்றன.

திருக்கழிப்பாலைக்குச் சம்பந்தர் பதிகம் இரண்டும், நாவுக்கரசர் பதிகம் ஐந்தும், சுந்தரர் பதிகம் ஒன்றும் ஆக எட்டு திருப்பதிகங்கள் உள்ளன.

சம்பந்தர் திருப்பதிகத்துள் இறைவனைப் பலவாறு விளித்து உன் திருவடி வணங்குவன் என்று கூறப்பட்டுள்ளது. கழிப்பாலை இறைவனை ஏத்துவார், இடர், அவலம், வினைகேடு இவை நீங்கப்பெறுவர் என்று கூறப்படுகிறது.

மற்றோர் திருப்பதிகத்துள், இறைவன் சிறப்பியல்புகள் பலவும் விரித்துரைக்கப்பெற்று "அவனைவணங்குவார் வினைஅழியும்; அவனை அடைந்து உய்மின் " என்று நம்மைக் கழிப்பாலைக்குச் செல்லுமாறு ஆற்றுப்படுத்துகிறது.

திருநாவுக்கரசர்திருப்பதிகம் ஒன்று அகப்பொருட்பதிகமாக, செவிலி அல்லது தோழி கூற்றாக அமைந்துள்ளது. " வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றாளால்" இவள் " கழிப்பாலை உறைவானை கண்டாள் கொல்லோ " என்பன போன்ற தொடர்களால் பாடல்கள் அமைந்துள்ளன.

இரண்டாம் பதிகத்து சேர்ப்பன் என்ற நெய்தல் தலைவன் பெயரால் இறைவன் திருப்பெயரைக் கூறுகிறார் அப்பர்.

திருமாலுக்கு அருளும் ஆழியும் அளித்த செயல் அறுவகைச் சமயம் தோற்றிய செயல் முதலியன கூறப்பட்டுள்ளன.

மூன்றாவது திருப்பதிகத்துக் கழிப்பாலையின் இயற்கை எழில் நெய்தல் நிலவருணனையாக அமைந்துள்ளது.

" நெய்தல் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச்சென்று
கைதை மடல்புல்குதென் கழிப்பாலை "

என்றும், நமன் தமரால் கோட்பட்டு ஒழிவதன்முன் கழிப்பாலை இறைவற்கு ஆட்பட்டோம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

நான்காம் திருப்பதிகம் அகப்பொருள் பதிகமாக அமைந்துள்ளது. செவிலி அல்லது தோழி கூற்றாகக் கொள்ளலாம். தலைவி எனப்படுவாள் இப்பதிகத்து இறைவன் திருவருளைப் பெற விழையும் அன்புள்ளம் கொண்ட அடியார் " கழிப்பாலை இறைவன் துஞ்சும்போதும் துணையாவான் " என்ற தொடர் நம் உள்ளத்தைவிட்டு அகலாத தொடராகும்.

ஐந்தாம் திருப்பதிகம் திருத்தாண்டகமாகும். " கழிப்பாலை மேய கபாலப்பனார் " என்று இறைவனைப் பாடல்தோறும் குறிக்கிறார். " ஊன்உடுத்தி ஒன்பது வாசல்வைத்து ஒள்எலும்பு தூணா உரோமம் மேய்ந்துதாம் எடுத்த உரை ' என உடல் கூறப்பட்டுள்ளது. " வானிடத்தை ஊடறுத்து வல்லைசெல்லும் வழிவைத்தான் " என்றும்,

" செற்றதோர் மனமொழிந்து சிந்தைசெய்து
சிவமூர்த்தி என்றெழுவார் சிந்தையுள்ளால்
உற்றதோர் நோய்களைந்திவ் வுலகமெல்லாம்
காட்டுவான் "

என்றும், இறைவன் இயல்புகள் பலவாறு கூறப்பட்டுள்ளது.

சுந்தரர் திருப்பதிகம் மிக உருக்கமாகக் கழிப்பாலை இறைவனைப் போற்றி உரைக்கின்றது.

" எங்கேனும் இருந்துன் அடியேன்உனை நினைந்தால்
அங்கேவந் தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே "

என்றும், " விரும்பேன் உன்னையல்லால் ஒருதெய்வம் என்மனத்தால் " என்றும்,

" பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கேஒத்த தேவர்பிரான்."

என்றும் கூறும் பாடல் தொடர்கள் நம் நெஞ்சை விட்டு நீங்காதன.

திருநாரையூருக்குச் சம்பந்தர் பதிகம் மூன்றும் அப்பர் பதிகம் இரண்டும் ஆக ஐந்து பதிகங்கள் உள்ளன.

சம்பந்தர் முதல் பதிகத்துள் 'திருநாரையூரைக் கைதொழ மனம் வாக்குக் காயங்களால் செய்யப்படும் பாவங்கள், பிணி, நோய், இறப்பு, வினை முதலிய நீங்கும்; தவம், சிவசிந்தனை, திருவளர்செம்மை, அருள் முதலிய உண்டாகும்' என்று கூறப் பெற்றுள்ளது.

இரண்டாம் திருப்பதிகத்தில் இறைவன் பெருமைகளைப் பலவாறு எடுத்தோதி அவனைப் பணிவோம் என்று கூறுகிறார். தீவினை தீர்க்க திருநாரையூரில் இறைவன் எழுந்தருளியுள்ளான் எனவும், இத்தலத்திறைவனை வழிபட்டார் ஏதம் இலர், விழுமியர் எனவும் கூறுகிறார்.

மூன்றாந்திருப்பதிகம் நாரையூரானைப்பாடுமின் எண்ணுமின் பழிபோகும்; உயர்வாகும் என்று கூறுகிறது.

திருநாவுக்கரசர் திருப்பதிகம் " நாரையூர் நம்பனுக்கு ஆறு சூடலும் நஞ்சையள்ளி உண்டலும் ஆலநீழல் முதலியனவும் அம்ம அழகிது " என்று கூறுகிறது.

மற்றோர் திருப்பதிகம் திருத்தாண்டகப் பதிகம். நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே என்று முடியும் தொடர்களால் அமைந்தவை. " அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்தன்னை " என்றும், " ஆலதன் கீழ் அறம் நால்வர்க்கு அருள்செய்தான் " என்றும் கூறும் தொடர்கள் போன்ற சிறப்புடையன பாடல் தொடர்கள் முழுதும்.

(தொடரும்)

திருக்கோயில் அமைப்பு முறை

— திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள்

தென்னாட்டுச் செல்வம்

"சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்றார் திருமூலரடிகள். சிவபெருமான் எங்கும் நிறைந்தவர். இன்ப வடிவினர். சிவபெருமானை நோக்கி "திருவே என் செல்வமே" என்று பாடினார் வாகீசர். "சென்றடையாத திருவுடையானை" என்று குறித்தார் சம்பந்தர். அன்போடு உருகி அகங்குழையும் அடியார்கள், அஷ்டமூர்த்தியாகிய சிவபெருமானுக்கமைந்த ஆலயத்தைத் "திருக்கோயில்" என்ற செந்தமிழ்ச் சொல்லால் குறித்து வழங்கினர். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம்நாட்டில் சொல்லிவரும் நீதிமொழி ஒன்றுண்டு. நம் தமிழ்நாட்டில் கோயில் இல்லாத ஊரைக் காண்பது மிக அரிது. தெய்வ வழிபாட்டிற்காக அமைக்கப் பட்டுள்ள ஆலயங்கள் சிற்பக்கலையின் களஞ்சியங்களாகத் தென் னாட்டில் திகழுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருவுரு சிந்தித்தல் :

திருக்கோயில் அமைப்பு முறைகளையும் சிற்ப லக்ஷணங் களையும் விரித்துரைக்கும் பழம்பெரும் சாஸ்திர நூல்களுள் "ஆகம சாஸ்திரங்கள்" மிக முக்கியமானவை. சேக்கிழார் பெருமான், தாமருளிய "பெரியபுராணத்தில் ஆகம விதிப்படி ஆலய வழிபாடுகளும் நடைபெற்றுள்ளன" என்பதைக் குறிப் பிட்டிருக்கிறார்கள். பூசலார் நாயனார் திருக்கோயில் அமைத்த முறையை நமக்குக்கூறும் தெய்வச் சேக்கிழாரடிகள்,

"......ஆகமத்தால் அடிநிலை பாரித்து அன்பால்
காதலிற் கங்குற்போதுங் கண்படா தெடுக்கலுற்றார்"

என்ற பாடலில் "ஆகமத்தால்" திருக்கோயில் அமைக்கப் படுவதை நமக்குக்காட்டியுள்ளார்கள். நம் தமிழ்நாட்டிலுள்ள

மிகப் புராதனமான ஆலய அமைப்புக்களையும் இன்று நம்மிடையே பாரம்பரியமாக இருந்துவரும் ஆகம நூற்கருத்துக்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது சேக்கிழார்பெருமான் குறிப்பிட்ட 'ஆகமத்தின்'' சிறப்பு வெளிப்படுகின்றது. ''காரணாகமம்'' என்ற ஆகம நூலில் திருக்கோயில் அமைப்புபற்றிய விஷயங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் கட்டுவதற்கு அடிப்படையாக வேண்டிய அளவு முறைகள் - ஆலயங்களின் தோற்ற அமைப்புக்கள் - மண்டப இலக்கணங்கள் - சுற்றுப்பிராகாரங்கள் - மூலவரைச் சூழ்ந்துள்ள பரிவார தேவர்கள் இருக்கவேண்டிய இடங்கள் - அவர்களின் இலக்ஷணங்கள் ஆகியவற்றை வடமொழியிலுள்ள காரணாகமத்திலிருந்து இனிய தமிழ்மொழியில் எடுத்துக்காட்டவேண்டும் என்பது அடியேனின் அவாவாகும். திருக்கோயிலைப்பற்றிய எண்ணம் எழும்போதெல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் நினைவும் தோன்றுகின்றது. '' சித்தசிவன் குருவாய் வந்து தூய்மைசெய்யும் கயிலைக் குருவரரின் திருவுருவைச் சிந்தித்தவண்ணம் '' காரணாகமம் காட்டும் திருக்கோயிலின் அமைப்பு முறையை எழுத முற்படுகிறேன்.

அங்குல அளவு முறை :

முதன்முதலில் ஆகமத்தைத் தமிழில் வெளிப்படுத்தியவர் நம்பிரான் திருமூலரேயாவர். தாம்பெற்ற ஒன்பது ஆகமங்களின் பெயர்களைத் திருமூலரடிகள் குறிப்பிடும்போது '' காரணம் '' என்ற ஆகமத்தையே முதலாவதாகக் குறிப்பிடுகின்றார். இக்காரணாகமத்திலிருந்து திருக்கோயில் அமைப்பிற்குத் தேவையான அளவு முறைகளை முதலில் அறிந்துகொள்வோம்.

'' மானாங்குலம் - மாத்திராங்குலம் - தேஹலப்தாங்குலம் என்று அங்குல அளவுகள் மூன்று வகைப்படும். ஓர் அழகிய சிறந்த ஆலயம் அமைவதற்கு இம்மூன்றுவித அளவு முறைகளும் அவசியம் வேண்டுவனவே. திருக்கோயிலின் முக்கிய பகுதிகளான கர்ப்பகிருஹம் - விமான கோபுரங்கள் - சபாமண்டபம் - இன்னும் பலவகை மண்டபங்கள் - சுற்றுப்பிராகாரங்கள் ஆகியவற்றையெல்லாம் '' மானாங்குலம் '' என்ற அளவு முறைப்படி அமைக்கவேண்டும். வேள்விச்சாலையையும் வேள்விக்கு வேண்டிய கருவிகளையும் '' மாத்திராங்குலம் '' என்ற அளவுகொண்டு அமைக்கவேண்டும். '' தேஹலப்தாங்குலம் '' என்ற

அளவுமுறை பிரதிமை அல்லது சிற்பங்களைச் செய்வதற்கென கூறப்பட்டுள்ளதாகும்.

1. மாணுங்குலம் :

திருக்கோயில் அமைப்பிற்கெனக் கூறப்படும் "மாணுங்குல" அளவு முறையைக் காண்போம். சூரியன் தன் ஒளிக்கதிர்களை மண்ணுலகை நோக்கிச் செலுத்துகின்ருன் ! இருள் சூழ்ந்த ஓர் அறையின்மேலுள்ள ஓர் சிறிய சாளரத்தின் வழியே அருணனின் ஒளிக்கதிர்கள் அறையினுட் புகுந்து ஒளியைப் பரப்புகிறது. அப்போது அந்த ஒளிக்கதிர்கள் புழுதி அல்லது புகை போன்று தெரிந்தும் தெரியாமலும் மிக மெல்லிய நூல் போன்ற ஒளிக் கோடுகள் பல விரவி இருப்பதை நாம் காண்கின்ருேம். இந்த ஒளிக்கோடுகளில் ஒன்றைப் "பரமாணு" என்று காரணுகமம் கூறுகின்றது. இந்தப் பரமாணுவிலிருந்து அளவு தொடங்குகிறது. பரமாணு எட்டு கொண்டது ஒருரேணு, எட்டுரேணு ஒரு ரோமம் (மயிரிழை) ரோமம் எட்டு சேர்ந்தது ஒரு லீக்ஷை. எட்டு லீக்ஷை ஒரு யூகை. எட்டு யூகை ஒரு யவம். (யவம் என்பது ஒருவகை நெல்). எட்டு யவம் சேர்ந்தால் ஒரு அங்குலமாகும். 12 அங்குலம் "தாலம்" என்பதாகும். 24 அங்குலம் ஒரு கிஷ்குஹஸ்தமாகும் (கை முழம்). 25 அங்குலம் "பிராஜாபத்தியகரம்" என்பதாம். 26 அங்குலம் கொண்டது "தனுர்முஷ்டி" என்று சொல்லப்படுகிறது. 27 அங்குலம் கொண்ட அளவுகோல் "தனுக்கிரஹம்" என்ற பெயர் பெறுகிறது. '24 அங்குலமுள்ள கிஷ்குஹஸ்தம்" என்ற அளவை வைத்து ஆசனம் (ஆசனப்பலகை - ஆசனமேடை) பள்ளியறை (சயனுலயம்) வாஹனங்கள் இவற்றை அமைக்க வேண்டும். கோயில்கள், விமானங்கள் - கோபுரங்கள் - சபா மண்டபங்கள் - முகப்பு மண்டபங்கள், வீடுகள் இவைகளை 25 அங்குலம் கொண்ட "பிராஜாபத்யகரம்" என்ற அளவைக் கொண்டு கட்டவேண்டும். 26 அங்குலமுள்ள "தனுர்முஷ்டி' என்ற அளவால் அரச இருக்கை முதலிய அரசியற்கட்டிடங்களையும் திருக்கோயிலுக்குரிய குளம் தோப்புகள் ஆகியவற்றையும் நிர்மாணிக்கவேண்டும். "தனுக்கிரஹம்" என்ற 27 அங்குல அளவையை ஆதாரமாகக்கொண்டு நந்தவனம் வயல் வெளிப் புறங்களைத் தோற்றுவிக்கவேண்டும். இவ்வாறு ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன.

விளக்கம் :- உதாரணமாக இங்கு ஓர் ஆலயத்தின் முகப்பு மண்டபத்தைச் சுமார் ஐந்துமுழ அளவில் அமைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஆகம விதிப்படி "பிரஜா பத்தியகரம்" என்ற 25 அங்குலத்தை ஒரு முழமாகக்கொண்டு ஐந்து முழத்திற்கு 125 அங்குல விஸ்தாரத்தில் (பரப்பளவில்) முகப்பு மண்டபம் அமையவேண்டும். இதேபோல் திருக்கோயில் உபயோகத்திற்காக இதே ஐந்துமுழ அளவில் ஓர் குளமோ கிணறோ தோண்டுவதாக வைத்துக்கொள்வோம். 26 அங்குல முள்ள "தனுர்முஷ்டி"யை ஒரு முழ அளவையாக ஐந்துமுழ முள்ள குளத்தின் விஸ்தாரம் 130 அங்குலம் உள்ளதாகத் திருக்குளம் அமையும். இவ்வாறு திருக்கோயிற் பகுதிகளும், கோயிற்பணிகளுக்குப் பயன்படும் நந்தவனம் - குளம் - கிணறு முதலியனவும், அங்குல அளவில் ஏற்றத்தாழ்வால் வித்தியாசப் படுவதை நன்கு உணரவேண்டும். திருக்கோயிலின் முக்கிய பகுதியான கர்ப்பகிரஹமும் - இதன்விமானமும், இதைத்தழுவிய பரந்தமண்டபங்களும் - 'பிராஜாபத்தியகரம்" என்ற 25 அங்குலம் கூடிய முழத்தால் அமைக்கவேண்டுமென்பது ஆகமவிதி காரணாகமத்தில் கூறப்படும் திருக்கோயில் அமைப்பு முறைகளையும் இன்று நாம் காண்கின்ற பழைமையான திருக்கோயில்களையும் ஒப்பிட்டுப்பார்த்தல் வேண்டும். அப்போது இந்த அளவு முறைகள் பயன்படும்.

உ. மாத்திராங்குலம் :

திருக்கோயிலுள் இரண்டு அல்லது மூன்றும் பிராகாரத்தில் வடகிழக்குத்திக்கில் மேற்குநோக்கியவண்ணம் யாகசாலை இருக்க வேண்டும் என்பது ஆகமவிதி. யாகசாலையை மாத்திராங்குல அளவுமுறையைக் கையாண்டு அமைத்திடவேண்டும். வலதுகை நடுவிரலின் நடுரேகைக் கோட்டிற்கும் மேல் ரேகைக் கோட்டிற்கும் இடையிலுள்ள உயரமே "மாத்திராங்குலம்" என்று கூறப் பட்டுள்ளது. யாக வேதிகை - ஹோமகுண்டங்கள் - ஸ்ருக்கு - ஸ்ருவங்கள் - தர்ப்பையினால் ஆகும் கூர்ச்சங்கள் - விஷ்டரங்கள் ஆகிய சிவ வேள்விக்கு வேண்டுவனவற்றையெல்லாம் மாத்திராங்குல அளவுகளின்படி அமைக்கவேண்டும்.

(தொடரும்)

செய்திகள்

கந்தர் சஷ்டி தரிசனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் இவ்வாண்டும் கந்தர் சஷ்டிக்குத் திருச்செந்தூரில் எழுந்தருளி முருகப்பெருமானை வழிபட்டார்கள். உடன் ஆதீனத் தொண்டர்களும் சென்றிருந்தார்கள். செந்தில்மாமலையுறும் செங்கல்வராயனை, அலைவாய் அமர்ந்த அருமணியை மௌனத்தவமிருந்து வழிபட்டார்கள்; உண்ணுநோன்பிருந்து உவந்து தொழுதார்கள். திருமுறைப் பாராயணங்கள் முறையே நிகழ்ந்தன. சூரசம்கார தரிசனத்திற்குப்பின் மதுரைக்கு எழுந்தருளிக் கார்த்திகை சோமவாரத்தில் அங்கயற்கண்ணியோடமர்ந்த ஆலவாய்ச் சொக்கேசனை ஏத்தித் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

தருமையாதீனத்தில் மெய்கண்டார் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் மெய்கண்டார் திருநாள் சோபகிருதுஆண்டு ஐப்பசித்திங்கள் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை சைவ சந்தான முதற்குரவராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனார் திருநாளை முன்னிட்டு ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனார்க்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சிவஞானபோதச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்தும் கேட்டும் உய்ந்தனர்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் கவிதையரங்கம்

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தின் சார்பில் தமிழ்ப்புலவர் மாணவர்கள் கவிதை

யியற்றும் திறனும் பெற்றுச் சிறக்க வேண்டுமென்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்களின் திருவுள்ளப்படி இக் கவிதையரங்கம் 5—12—63 வியாழக்கிழமை மாலை மாயூரம் மகாதானத் தெருவில் உள்ள கல்லூரிக் கட்டிடத்தில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்விரிவுரையாளர், கவிஞர் திரு. அ. கலியபெருமாள், எம்.ஏ., அவர்கள் தலைமையேற்றார்கள். கல்லூரி முதல்வரும் கழகத் தலைவருமான வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். பேராசிரியர் வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள் தலைமையேற்ற கவிஞருக்கு 'வரவேற்புக் கவிமலர்' ஒன்றைப் படித்தளித்தார்கள்.

தலைவர் தம் முன்னுரையை இனிய கவிதையிலே ஆற்றிய பின் மாணவர்கள் திருவாளர்கள். ஆ. மகாலிங்கம், கு. பழநிச்சாமி, சோ. நடராசன், கு. கலியமூர்த்தி, இரா. சந்திரசேகரன், க. செல்லப்பா கவுண்டர். மா. கிருட்டினமூர்த்தி, அ. அ. ஞான சுந்தரத்தரசு, இரா. செல்வக்கணபதி (கழகச் செயலாளர்) ஆகியோர் வாழ்விக்கும் பண்புகளாம் கல்வி, உண்மை, அழகு, அன்பு, நட்பு. பக்தி. அறம், கொடை, ஒழுக்கம் ஆகிய தலைப்புக்களில் முறையே தாந்தாமியற்றிய கவிதைகளை அரங்கேற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், பேராசிரியர் வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியாரவர்கள் இனிதே நன்றி நவின்றார்கள்.

வரவேற்புரை, முதற்கூட்ட அறிக்கை, நன்றியுரை முதலிய நிகழ்ச்சிகள் அனைத்தும் கவிதையிலேயே நடைபெற்றமை திரளாக வந்திருந்த மாயூரம் பெருமக்களைப் பெருமகிழ்வில் ஆழ்த்தியது.

கந்தர்சஷ்டித் திருநாள்

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்புள்ளிருக்கு வேளூரென்னும் வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி

தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு கந்த சஷ்டித் திருவிழா 17—11—63 அன்று தொடங்கி 26—11—63 அன்று வரை சிறப்புற நிகழ்ந்தது. விழாநாட்களில் சிறந்த நாதஸ்வர இன்னிசை முதலியன நடைபெற்றன. 22—11—63 அன்று சூரசம்காரமும். 24—11—63 அன்று தெய்வயானை திருக் கல்யாணமும், 25—11—63 அன்று ஸ்ரீ வள்ளியம்மை திருக்கல் யாணமும் சிறப்புற நிகழ்ந்தன. நாடோறும் ஸ்ரீ ஆறுமுகருக் கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் ஷண்முகார்ச்சனைரூப மான லக்ஷார்ச்சனைகள் நடைபெற்றன. அன்பர்கள் பலர் சஷ்டி உபவாசமிருந்து வழிபட்டு உய்ந்தனர்.

கந்தஷஷ்டி விழாவைக் குறித்து சொற்பொழிவுகள் நாள் தோறும் மாலை 6 மணிமுதல் தொடங்கி நடைபெற்றன,

18—11—63 திங்கட்கிழமை திருவையாறு செய்தியாளரும் சமயப்பிரசாரகருமான திரு. ஜி, தனவேலுப்பிள்ளை அவர்கள் "முருகன் பெருமை" என்ற பொருளிலும், 19—11—63 செவ்வாய்க்கிழமை அண்ணமலைப் பல்கலைக்கழகம், கல்வெட் டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் "திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்" என்ற பொருளிலும், 20—11—63 புதன்கிழமை தருமை யாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், "திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும். 21—11—63 வியாழக்கிழமை சிதம்பரம், பச்சை யப்பன் உயர்பள்ளி, தமிழாசிரியர், வித்துவான். திரு. ச. சேது சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "கந்தரனுபூதி" என்ற பொரு ளிலும் சொற்பொழிவாற்றினர். 25—11—63 திங்கட்கிழமை மாயூரம் திரு. கணேசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் வந்து கேட்டு உய்ந்தனர்.

மாயூரம் குமரக்கட்டளையில் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான குமரக்கட்டளை (மாயூரம்) ஸ்ரீ வல்லீதேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டித் திருவிழா 17—11—63 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 27—11—63 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப் பாக நடைபெற்றது. 22—11—63 அன்று சூரசம்காரமும்,

23—11—63 அன்று திருத்தேர்த் திருவிழாவும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் உபவாசமிருந்து வழிபட்டுய்ந்தனர். 13-11-63 முதல் 22—11—63 முடிய உள்ள நாட்களில் லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

17—11—63 ஞாயிற்றுக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர். சித்தாந்தக்கலைமணி, வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய பின்னர், மாயூரம் சங்கீதவித்துவான், திரு. சுப்பிரமணிய அய்யர் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது. 18—11—63 திங்கட்கிழமை தஞ்சை திருமதி. T. R. கமலாமூர்த்தி குழுவின ரால் "ஸ்ரீ தேவசேனு கல்யாணம்" கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பெற்றது. 19—11—63 செவ்வாய்க்கிழமை தருமை யாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, சங்கீதசாகித்ய வல்லப, கதாரசாஸ்வாதக, பாகவதர், எம்பார், ஸ்ரீமத். விஜயராகவாச் சாரியார் குழுவினரால் "தக்கன் வேள்வி" என்ற பொருளில் கதாகாலக்ஷேபம் நிகழ்த்தப்பெற்றது. 20—11—63 புதன் கிழமை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் "முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும் 21—11—63 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A., "திருமலைமுருகன் பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் திரளாக வந்து கேட்டு இன்புற்றனர்.

திருக்கடவூரில் 1008 சங்காபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத் தில் கார்த்திகைச் சோமவார நாட்களில் (18-11-63, 25-11-63, 2-12-63, 9-12-63) ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிக்கு 1008 சங்கா பிஷேகம் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. 2, 9—12—63 ஆகிய நாட்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். 9—12—63 அன்று சோமவார விரதச் சிறப்பு என்ற நூலை வெளியிட்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னைத் தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 24—11—63 காலை 10½ மணிக்குத் திருவதிகை திருவீரட்டானேசுவரர் திருக்கோயிலிலும், பகல் 12½ மணிக்கு அப்பர் சுவாமிகள் அவதரித்த திருவாமூர் ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயத்திலும், திருநாவுக்கரசு நாயனுர் திருக்கோயிலிலும், மாலை 4 மணிக்கு ஸ்ரீ சுந்தரர் அவதரித்த திருநாவலூர் ஸ்ரீ பக்தஜனேஸ்வரர் ஆலயத்திலும் சிறப்பாக நடைபெற்றது.

வழிபாட்டுக் குழுவினர் திருவதிகைக்கோயிலையடைந்தவுடன் அவ்வூர் அப்பர் இல்லத்து மாணவியர்களும், ஊர்ப்பொது மக்களும், அறங்காவலர்களும் தேவார பாராயணத்துடன் வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நடத்திவைத்தனர். திரு. ந. சண்முகசுந்தரத் தேசிகர், திரு. இரா. சண்முகசுந்தரம் செட்டியார், தர்மகர்த்தர் திரு. சுப்பிரமணிய செட்டியார் இவர்களின் முயற்சி பாராட்டத்தக்கதாயிருந்தது.

திருவாமூர்க்கோயில் அறங்காவலர், திரு. தெய்வநாயக ரெட்டியாரும், ஊர்ப் பெருமக்களும், பொதுமக்களும் வழிபாட்டுக் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நடத்திவைத்தனர். வீரப்பெருமாள்நல்லூர் திரு. சாம்பசிவ ரெட்டியாரவர்கள் திருநாவுக்கரசு நாயனுருக்குச் சதய நக்ஷத்திரத்தை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனை செய்துவைத்தார். மேலும் வழிபாட்டுக்குழுவினருக்குத் தமது இல்லத்தில் மாகேஸ்வரபூஜை செய்து உபசரித்தார். திரு. M. அசுவத்தராம ரெட்டியார், திரு. R. A. இராமமூர்த்தி ரெட்டியார் முதலியோர் உடனிருந்து வரவேற்று உபசரித்தனர்.

மாலை 4 மணிக்குத் திருநாவலூரில் ஊர்ப் பொதுமக்களும், பிரசாரகர், திரு. மாணிக்கம் பிள்ளையவர்களும் குழுவினரை வரவேற்று வழிபாட்டை உடனிருந்து நன்முறையில் நடத்திவைத்தார்கள். ஒவ்வொரு தலத்திலும் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு P. சுவாமிநாதன் அவர்கள் அவ்வத்தலத் தேவாரத் திருப்பதிகங்களையும் பக்திப் பாடல்களையும் ஓதி மகிழ்வித்தார்கள். வழிபாட்டின் பின்னர் திருநாவலூர் திருக்கோயில்

முன் மண்டபத்தில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திரு. V. இரத்தின முதலியார் B. A., B. L., திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை B. A., B. L., திரு. G. M. முத்துசாமி பிள்ளை B. A., புலவர், திரு. அ. நடேச முதலியார், திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. ஆகியோர் பாடல்பெற்ற தலங்களின் சிறப்பும், சுந்தரர், நாவுக்கரசர் பெருமைகளையும் எடுத்துக்கூறி உள்ளூர்மக்கள், முயற்சியுடன் இருக்கவேண்டியதையும் வற்புறுத்தினர். திரு. நா. மாணிக்கம் பிள்ளையவர்கள் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள்.

திருவாரூர் ஆரம்ப ஆதாரப் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் 144 பேருக்கும் வழிபாட்டுக்குழு அன்பரும், சென்னை லக்ஷ்மி கலர் கம்பனி உரிமையாளருமான திரு. V. சிவராமஐயர் 144 அலுமினியம் தட்டுகள் வழங்கியதோடு சிற்றுண்டியும் வழங்கினார்கள். திரு. K. C. நாகலிங்க முதலியார் ஷை மாணவ மாணவியர்கட்குத் தண்ணீர் அருந்துவதற்கு 25 டம்ளர் வழங்கினார்கள்.

அப்பர் சுவாமி திருவுருவத்திற்கு வெள்ளிக் கவசம் செய்ய ஏற்பாடு செய்து உண்டியல் எடுத்ததில் 58 ரூபாய் வசூலாயிற்று. 3,500 ரூபாய் செலவில் வெள்ளிக் கவசம் செய்வதாகத் திட்டம் செய்யப்பட்டுள்ளது.

தொகை அனுப்புவோர்:- திரு. M. அசுவத்தாமரெட்டியார், மணப்புத்தூர், உறையூர் P. O. விழுப்புரம் R. M. S. என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

திருக்கடவூர் சங்காபிஷேகத் தீர்த்தப் பிரசாதம் வழங்கும் விழா

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரருக்கு 1008 சங்கு கொண்டு கார்த்திகைமாத சோமவாரங்களில் செய்யப்பெறும் அபிஷேகத் தீர்த்தப் பிரசாதமும், விபூதி குங்குமப் பிரசாதமும் ஒவ்வொரு சோமவாரத்திற்கும் அடுத்த நாள் சிவாசாரியார் மூலம் கொண்டுவரச்செய்து, சென்னைத் தியாகராயநகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் திருக்கடவூர்த் தேவாரப் பதிகங்களையும், அபிராமி அந்தாதியையும் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் ஓதி பிரார்த்தனை நிகழ்த்தியபிறகு பக்தர்கட்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

19—11—63 அன்று பிரசாதம் வழங்கும்போது திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும், 26—11—63 அன்று திரு. G. M. முத்துசாமிப் பிள்ளை அவர்களும், 3—12—63 அன்று திரு. நல். முருகேச முதலியார் அவர்களும் தலைமையுரை நிகழ்த்தினார்கள். திருக்கடவூர்ப் பெருமையையும், சங்காபிஷேகச் சிறப்பையும் விளக்கினார்கள்.

திருக்கார்த்திகைத் திருவிழா

வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

நமது நிலைய மன்றத்தில் 30—11—63 சனிக்கிழமை மாலை 7-மணிக்கு திரு. K. E. அருணாசல முதலியார் M. A., B. Com. அவர்கள் தலைமையில் திருக்கார்த்திகை விழாக் கொண்டாடப் பெற்றது. "திருக்கார்த்திகைச் சிறப்பு" என்னும் பொருள்பற்றி திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

1—12—63 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

அன்பர்கள் பலர் வந்து விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து கிருத்திகைப் பிரசாதம் பெற்று உய்ந்தனர்.

கந்தசஷ்டி விழா

நமது நிலைய மன்றத்தில் கந்தசஷ்டித் திருநாள் 17-11-63 ஞாயிற்றுக்கிழமை முதல் 23—11—63 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் கந்தசஷ்டி விழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 17—11—67 அன்று மாநில அறநிலையத்துறை ஆணையர் உயர்திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துத் தொடக்கவுரை யாற்றினார்கள். 19-11-63 செவ்வாய்க்கிழமை திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்களும், 20—11—63 புதன்கிழமை பைந்தமிழ்ச்செல்வர், திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்களும், 21—11—63 வியாழக்கிழமை திரு. K. கமலக்கண்ணன் M. L. C. அவர்களும், 22-11-63

வெள்ளிக்கிழமை திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை B. A., B. L., அவர்களும், 23—11—63 சனிக்கிழமை திரு. K. E. அருணாசல முதலியார் M. A., B. Com. அவர்களும், தலைமையேற்றுத் தலைமையுரை யாற்றினார்கள். உடையாளூர், வித்துவான். திரு. A. இராஜகோபால சர்மா அவர்கள் குழுவினரால் பார்வதி அம்மையார் திருமணம், திருமுருகன் அவதாரம், மார்க்கண்டேயர் சரித்திரம், தாரகாசுரவதம், சூரபதுமன் ஆட்சி, சூரபதுமன் ஆட்படலும் தெய்வயானை அம்மையார் திருமணமும், வள்ளி அம்மையார் திருமணம் என்ற தலைப்புக்களில் கந்தபுராணம் பற்றிய கதாகாலக்ஷேபம் நாள் தோறும் நிகழ்த்தப்பெற்றது. விழா நிகழ்ச்சிகள் நாள்தோறும் மாலை 7-15 மணிக்கு சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கத்துடன் தொடங்கி நடைபெற்றன.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I had the good fortune to visit this ancient temple with my wife today and get the blessings of the Presiding Deities. The temple is very well maintained and the religious services are performed methodically.

(Sd) V. Muthuswamy Pillai,
Examiner of Local Fund Accounts.
Madras.

7—12—63.

இந்த திவ்யக்ஷேத்திரத்தில் வந்து தரிசனம் செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது அவன் அருள். சந்நிவேசமும் கோயிலின் பிராகாரம் முதலியவற்றில் காணும் சுத்தநிலையும் பக்தர்கள் மனதைச் சரியான நிலையில் வைக்கப் பெரும்உதவியாக அவனது அருளைத் தேடித்தருகின்றன. நன்றாகத் தரிசனம் செய்ய உதவிய அதிகாரிகளுக்கு நன்றி. எல்லாம் அவன் அருள். நான்சொல்ல என்ன இருக்கிறது.

A. N. சிவராமன்,
" தினமணி " ஆசிரியர்.

5—12—63.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

I had the good fortune to worship in this temple with family today (5—12—63) and get the blessings of the Presiding deities. The temple is well maintained and all the members of the staff were very helpful and useful in explaining the historic features of the temple.

(Sd.) V. Muthusamy Pillai,

5—12—63. Examiner of Local Fund Accounts,
Madras.

இத்திருக்கோயில் சுவாமிதரிசனம் செய்யும் பாக்கியம் இன்று எனக்குக் கிடைத்தது.

சன்னிதானமும் சுற்றுப்புறமும் மிகவும் சுத்தமான முறையில் வைக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் கும்பாபிஷேகம் ஆனதால், சிற்பங்கள் கோபுரங்கள் எல்லாம் மிக அழகாய் இருக்கின்றன.

கோயில் சிப்பந்திகள் மிக நல்ல முறைகளில் பல சிற்பங்களின் தாத்பர்யங்களையும் எடுத்துரைத்தார்கள்.

ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர் அவர்களின் தேவநாதம் இன்னும் பல தினங்கள் காதில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும்.

(Sd) P. செந்தில்நாயகம் பிள்ளை,

8—11—63. ஜில்லா ரெவின்யூ அதிகாரி, தஞ்சை

திருக்குறுக்கையில் :

ஸ்ரீ ஞானம்பிகை

சீகாழியில் :

இட்டசித்தியருளும் சட்டைநாதக்கடவுள்

எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(சோபகிருதுஸூ மார்கழிமீ 1வ முதல் 29வ முடிய)

(16—12—63 முதல் 13—1—64)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத் தரும். நூதன உத்தியோக லாபமும் இல்லற சுகமும் கிரய விக்ரய லாபங்களும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் விசேஷமிராது. அதிக செலவினங்களும் குடும்பத் தொல்லைகளும் ஏற்படச்செய்யும். ரோஹிணி நான்கு பாதங்களும் மிருகசீர்ஷம் 1, 2 பாதங்களும் சுபத்தைத்தரும். லாபகரத்தோடு அலைச்சலை உண்டுபண்ணும், மேலோர் பெரியோர்களுடைய அன்பைத்தரும். மனம் சாந்தியடையும். புதன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும்; கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். வித்தியாவிருத்தியாகும்; தொழில் ஓங்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் மிச்சிரபலனைத் தரும். நூதன உத்தியோக லாபம் கிடைக்கச்செய்யும். இடம் மாறல் ஏற்படும்; மேலோர் அன்பு கிடைக்கும்; தான்ய விருத்தியில் குறைகாட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். இல்லற சுகம் விசேஷமாகும். நூதன வஸ்திரவாகனச் சேர்க்கை

யைத்தரும். தனதான்ய விருத்தி ஏற்படும். தெய்வபலம் பிரகாசிக்கச் செய்யும். நஷ்டமான பொருள்கள் தானாக வந்துசேரும். மனம் சாந்தி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் பூரம் 8 பாதங்களும் உத்திரம் முதல்பாதமும் சௌக்கியத்தை உண்டுபண்ணும். ஈதிபாதைகள் விலகும். தனதான்ய விருத்தி ஏற்படச்செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். பின்னும் பார்த்திராத சில அற்புதகரமான தெய்வீகதோற்றங்கள் உண்டாகும். மனம் சாந்தியடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும்சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். ஈதிபாதைகள் விலகும். தனதான்ய விருத்தி ஏற்படச்செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். என்றும் பார்த்திராத சில அற்புதகரமான தெய்வீகத்தோற்றங்கள் உண்டாகும்; மனம் சாந்தி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4 பாதங்கள் மிச்ர பலனைத்தரும். வரவு செலவு சமமாகும். குடும்பத்தொல்லைகள் அதிகமாகும். சுவாதி நான்கு பாதங்களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் சஞ்சார பலனைத் தந்து லாபத்தை உண்டுபண்ணும். நூதன பிரபுக்களுடைய தரிசனமும் ஏற்படச்செய்யும். சகல காரியங்களும் வெற்றியடையச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் கிரஹ சுகபோகத்தையும் நூதன உத்தியோக லாபத்தையும் தொழில் பெருக்கத்தையும் ஸ்தாவரஜங்கம கிரய விக்கிரயங்களையும், லாபத்தையும் தரும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனூர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும்; சஞ்சாரம் ஏற்படும். ஆரோக்யக்குறைவு உண்டுபண்ணும். புத்திராதி

களானல் சுபசந்தோஷம் உண்டாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் உத்தியோக உயர்வைத்தந்து கீர்த்திபத்திரத்தையும் தரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கச்செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும்; இல்லறசுகம் ஓங்கச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾.

சதய நக்ஷத்திரம் நான்கு பாதங்கள் மாத்திரம் மிச்ரபலனைத் தரும்; அவிட்டம் 3, 4 பாதங்களும் பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் விசேஷமான ராஜபோக சுக போகங்களையும் தந்து விசாலமான கீர்த்தியையும் தரும். இல்லறம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தெய்வபலத்தால் மேன்மேலும் உயர்பதவிகளையும் தன தான்யப் பெருக்கத்தையும் தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். நூதனமான தொழில்மூலம் விசேஷ லாபமும் கீர்த்தியும் கிடைக்கச்செய்யும். ராஜாங்கமூலம் ஜெயம் ஏற்படும். மனம் சந்தோஷமடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு: மேற்படி மாதம் தக்ஷிண பாரததேசம், தான்யப் பெருக்கைத்தந்து, சகல உலகங்களுக்கும் உபகாரத்தைச்செய்யும் படியான விசேஷ நன்மையை உண்டுபண்ணும். அந்த உத்தம பலனுக்கு வடவேங்கடம் முதல் குமரி பர்யந்தம் உள்ள புண்ணிய பூமிகளில் நடந்தேறிவரும் தெய்வீகமான மகாயக்ஞ பலன்களாலும் லக்ஷம் கோடி அர்ச்சன பலன்களாலும் சாதுக்களுடையவும் பக்தர்களுடையவும் தபோ பலத்தாலும் தெய்வ பலம் முன்னின்று உலகத்தை ரக்ஷிக்கச்செய்யும். மேற்படி மாதம் முதல் தேதியன்று காலை 9 மணிக்கு சங்கிரமண காலத்தில் அமாவாசையும் பிரதமை முதல் பாகத்திலும் 'ராகுகால அந்தத்திலும், விருச்சிகராசி, தனுர்ராசி சந்தியிலும்' சூரிய சங்கிரமணம் ஏற்படும் காலத்தில் ஏகராசியில் 6 கிரஹங்கள், மூல நக்ஷத்திரம் பூராட நக்ஷத்திரத்தில் சஞ்சாரம் ஏற்பட்டும் மேற்படி மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ராகுகிரஸ்த சந்திர கிரகணம் ஏற்படுவதாலும், மேற்படி 6 கிரகங்களும்

கேதுவின் தலைமையில் சேர்ந்தும் மேற்படி கேது கிரஹமானது உத்திர கோளத்திற்கும் வடகிழக்கு வடமேற்கு திவீபாந்தரங்களுக்கும் மிலேச்ச தேசங்களுக்கும் அதிபதியாகி தனுர் ராசியில் சங்கிரமண சமயத்தில் கூட்டம் சேருவதால் (சேர்க்கை கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன், கேது) உத்திர பாரத தேசத்துக்கும் மற்ற வடகிழக்கு வடமேற்கு தீவிபாந்தரங்களுக்கும் பலவிதமான இயற்கைக் கோளாறுகள் ரூபமாகவும் (அதாவது) பூகம்பங்கள், எரிமலை, பெருங்காற்றுக்கள், வால்நக்ஷத்திரங்கள் முதலிய உத்பாதங்களைக் காட்டி உள்நாட்டுக் கலகங்களையும் அதிகமாக்கி மிலேச்ச ராஜாங்கத்தாலும் நாஸ்தீக ராஜாங்கத்தாலும் மிகுந்த பயத்தைப் பலவிதத்திலும் உண்டுபண்ணி துர்பிக்ஷம், அகால மரணம் முதலிய பயத்தைக் காட்டுகிறபடியால் நமது பாரத பூமியில் வசிக்கும் மகான்களும் கனதனவான்களும் ஆஸ்தீக ஜனங்களும், காருண்ய காங்கிரஸ் ராஜாங்கத்தாரும் ஒன்று சேர்ந்து மதமாச்சரியம் இல்லாமலும் ஒருவருக்கொருவர் கோபதாபமில்லாமலும் எல்லா மக்களும் சுகவாழ்வு அடையவும் நமது பாரத பூமிக்கு எவ்வித ஆபத்து வராமலும் தடுக்கச்செய்ய ஒவ்வொரு ராஜதானியிலும் பெரிய நகரங்களிலும் மகாநதீ தீரங்களிலும் தெய்வ சக்தியையும் வேதாகம சாஸ்திர புராணாதிகளையும் பழைய சிஷ்டாசார தர்மங்களையும் நம்பி மகாருத்ர யக்ஞம் விஷ்ணுயாகம் மகாசண்டீ யக்ஞம் லக்ஷஹோம கோடி ஹோம கிரகயக்ஞங்கள் திக்பால யாகம் முதலிய யக்ஞங்களையும் ஒவ்வொரு சிவாலய விஷ்ணு ஆலய தேவீ ஆலயங்களிலும் லக்ஷம்கோடி அர்ச்சனைகளையும் நடத்திக்கொண்டு சதா தெய்வசிந்தனையோடு உலகக்ஷேமத்துக்காகப் பாடுபட்டுவர சமஸ்த மங்களமும் உண்டாகும்.

சென்ற அஷ்டகிரஹ கூட்டத்தினால் ஏற்பட்ட பலனை நாம் அனுபவித்து வருகிறோம். [ஷை கூட்ட கிரகங்களின் பலன், ஆரம்பத்திலேயே கொடுக்காமல் அதனுடைய கிரணங்கள் வியாபகம் ஏற்பட ஏற்பட மூன்று வருஷம் வரையிலும்கூட வியாபித்து உலகத்துக்குத் துஷ்ட பலனைத்தரும். அதே விதமாகவே சுப ஸ்தானங்களில் கிரகங்கள் தனித்தனியாய் பரமோச்ச பலன்களை அடையும் காலங்களிலும் உலகத்துக்கு விசேஷமான சுபிக்ஷத்தைத் தந்து உலகம் பூராவிலும் அமைதி நிலவிக்கொண்டு சகல ஜனங்களும் நித்யமங்களத்தோடும் சந்தோஷத்துடனும் வாழச் செய்யும். உலகத்தில் எங்கும் தெய்வசக்தி ஓங்கி நிற்கும். சுபமுண்டாகும்.

உ

சிவமயம்

“ஞானசம்பந்தம்”

இருபத்திரண்டாவது ஆண்டு மலர்ப்

பொருளடக்கம்

எண்		பக்க எண்
1	அந்தாதி	17
2	அப்பர் அவதார தலத்தில் கும்பாபிஷேகம்	388
3	அப்பர் நெறியில் அமரகவி	611
4	அருள்	262
5	அருள்வாக்கு	514, 597, 648
6	ஆடுகின்றான்	84
7	இடைக்குல மடந்தை	217
8	இணையுண்டோ	369
9	இதனைக்கண்டு மகிழ்வீரே	29
10	டாக்டர். இராஜேந்திர பிரசாத்	221
11	எதிர்காலம்	65, 117, 177, 229, 281, 333, 393, 445, 497, 561, 625, 678
12	ஏணியும் தோணியும்	271
13	உலகம் வாழ்க	121
14	உயிர்த்துணை	449
15	கடமை யாது	181
16	கடிதம்	261
17	கலம்பகத்தில் ஒருகாட்சி	477
18	கால்வண்ணம்	489

எண்		பக்க எண்
19	சங்கரசிவக்கொழுந்துமாலை	39
20	சஹஸ்ராகமம்	44, 97, 133, 213, 253, 313, 361, 421, 481
21	சத்தியேந்திரசோழன்	81, 143, 197
22	சமய ஒருமைப்பாடு	565
23	சித்தாந்த விஞவிடை	36, 78, 137, 191, 245, 301, 353, 413, 458, 529, 600, 650
24	சித்திரைச் சதயம்	235
25	சிவஞானபோதச் சிற்றுரை	411, 469, 588
26	சிவப்போகசாரத் திருப்பதிகம்	645
27	சிவவழிபாடு	309
28	சிவானந்தவெள்ளம்	337
29	செந்தமிழ்த்தாய்	488
30	செய்திகள்	57, 101, 162, 223, 275, 322, 381, 442. 493, 558, 618, 674
31	சேக்கிழார் திருவாக்கில் உலகெலாம்	662
32	ஞானக்கொழுந்து	292
33	ஞானசம்பந்தம் பணிகள் பற்றிய பாராட்டுரைகள்	14
34	தருமையாதீனத்தின் யுத்த உதவியும் வெற்றிப்பிரார்த்தனையும்	49
35	தருமையாதீன வெளியீடுகள்	55, 85, 157, 195, 268, 462
36	தருமையாதீனக் குருபரம்பரைத் தோத்திரம்	513
37	தருமையும் கமலையும் விரிதமிழ்க்கூடலும்	397
38	திருக்கார்த்திகைத் திருநாள்	1
39	திருக்குறள் கருத்துரை	1, 5, 9, 13, 17, 21, 25, 29
40	திரு. ச. சிவகுமாரன் M. A., உரைச்சுருக்கம்	540
41	திருப்படையெழுச்சி	54
42	திருநாவுக்கரசுசுவாமிகள் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்	432

எண்		பக்க எண்
43	திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு	372, 485
44	திருபுவனம் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்	501
45	திருவள்ளுவரும் அன்புடைமையும்	606
46	தை பிறந்தும் வழிபிறக்குமா?	69
47	தொல்காப்பியச்சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள்	88, 147, 201, 257, 305, 357, 417, 465, 581
48	தொழிலைத் தொண்டாகக் கருதவேண்டும்	492
49	நமது கடமை	569
50	நினைப்பென்னும் நெடுங்கிணறு	655
51	பன்னிருதிருமுறை மாநாடு	548
52	பிள்ளைத்தமிழும் பெரும்பெயர் முருகனும்	629
53	புத்தகவிமர்சனம்	671
54	புத்தாண்டு ஆசி	233
55	புனிதவதியார்	92, 151
56	பெரிதாந் திருப்பதிகம்	159
57	பொங்குக பொங்கல்	74
58	பொன்னியின் குரல்	33
59	மங்கையர்க்கரசியார்	20
60	மதிப்புரை	32, 222, 441, 616
61	மணிமேகலை	317, 363, 425, 473, 589
62	முத்திநிச்சயம்	349
63	முருகவழிபாடு	205
64	வணக்கம்	5, 73, 125, 185, 238, 296, 342, 401, 453, 507, 572, 636
65	வள்ளுவர் வகுத்த வழிபாடு	27
66	வாழ்க நல்லறங்காவலர்	569
67	வாழ்த்துரை	321
68	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வாழ்த்துரை	517

எண்		பக்க எண்
69	வித்தகனுர் விளையாடல்	249
70	ஸ்ரீ வனதுர்க்கைத் தசநாமாவலி	423
71	ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவ நிகழ்ச்சிகள்	285
72	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை	10, 75, 126, 186, 239, 297, 343, 402, 454, 508, 573, 637
73	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் கேதாரநாதம் பதரிநாதத் தல யாத்திரை	665
74	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாசி நமது கடமை	406
75	ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன் பிரசங்கம்	243
76	ஜஸ்திபதி அறிவுரை	242
77	PUNARNAVA	212
78	ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஸ்துதி	480
79	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆசியுரை	533

குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்

திருச்சிற்றம்பலம்

தாதார்கொன்றை தயங்குமுடியர் முயங்குமடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர்பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனு யறநான்கருள்செய்த
காதார்குழையர் வேதத்திரளர் கயிலைமலையாரே.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருக்கயிலையின் மேற்குமுக தரிசனம் செய்தருளல்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

திருமுறை இன்னிசைவாணர், வேளூர். க. சோக்கலிங்கம்.

இராகம் :- அரிகாம்போதி] [தாளம் :- ஆதி

பல்லவி

ஞாலம் புகழ்சிவ ஞான முனிவரடி
நாடிப் பணிமனமே நாளும் இந்த (ஞாலம்)

அனுபல்லவி

ஆலம் உண்டதிரு ஆலவாய்ப் பரமன்
அருளைப் பருகித்திரு தருமைப்பதி வாழ்வார் (ஞாலம்)

சரணம்

சித்தர் வான்வழியே செல்லுதல் தடைபடத்
திருவருட் செயலெனவே குருவடி பணிந்திட
அத்தருணமே மெய்ஞ் ஞானுபதேசம்
அளித்தவர் தம்மையே களித்திடச் செய்பவர் (ஞாலம்)

முன்விரும் பியஇள நங்கைக்கு பதேசம்
மொழிந்திட அவர்ஞான மயமாகி முதிர்ந்தார்
தன்தந்தை வீட்டுலகம் தானடைய வேண்டித்
தனைச்சரண் புகுந்தஅவர் தம்கருத்தே முடித்தார் (ஞாலம்)

முத்திதரும் காசி முதலாம் தலம்பலவும்
முறையால் வணங்கியே இறையருள் பெறுவார்
தித்திக்கும் செந்தமிழ்த் திருவருட் பாமாலை
திறம்பட அருளிச்சிவன் திருவடி சூட்டுவார் (ஞாலம்)

செந்திலம் பதிவேலனைச் சேவிக்கச் செலும்போதே
திங்குசெய் போற்றிகள் மூங்கையும் ஆகியே
வெந்துயர் கொளும்அவர் வீழ்ந்தடி பரவிட
வெண்ணீ றளித்துவெந் துயர்தனை விலக்கினர் (ஞாலம்)

அண்டிய பேய்ப்பிணியை அரசன்மகள் தனக்கே
அகற்றிஅப் பேய்க்குறும் அருஞ்சாபம் அகற்றினர்
அண்டிவந்த வர்க்கெல்லாம் அருளேசெயும் அவர்தம்
அற்புதச் செயலைநாம் அளவிடல் அரிதரிதே (ஞாலம்)

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-12-63.